உ

கடவுள்துணை.

கான்சாயபுசண்டை

இஃது,

திருவெண்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார்-குமாரர்

பரசுராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

௧௮௮௫ ௵

உ

கடவுள் துணை.

புஸ்தகவிளம்பரம்

—————()—————

இதனால் சகலமானபேர்களுக்கும் தெரிவிப்பதுயாதெனில்சென்னையைச்சார்ந்த சூளை இருங்குன்றம் இலட்சுமிநாராயணபுரத்தில்-தொட்டிக்கலை-குமரப்பமுதலியார் வீதியில் ௩௬-வது கதவிலக்கமுள்ளகிரகத்தில் ஸ்தாபித்திராநின்ற பரப்பிரமமுத்திராக்ஷரசாலையில், இதனடியில்கண்டிருக்கப்பட்ட புத்தகங்களல்லாமல், கற்றுணர்ந்தபெரியோர்களால்பிழையறப்பரிசோதித்து அச்சிடப்பட்டமிகமேலாகியஉபயோகமுள்ளபலவிதவேதாந்தசித்தாந்தகிரந்தங்களும், வயித்தியகிரந்தங்களும், ஜோசியகிரந்தங்களும், மகம்மதமார்க்க கிரந்தங்களும், இன்னும் அனேகவிதமான தமிழ்ப்புத்தகங்களும், விலைசரசமாய்விற்கப்படுமாகையால், வேண்டியவர்கள்மேற்படி அச்சுக்கூடத்துத்தலைவராகிய தி. இ. பரசுராமமுதலியாரிடத்தில் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

- ஸ்ரீமஹாபாகவதம் (௰௮) லெத்தகிராப்படத்துடன்
- திருவிளையாடற்புராண வசனம் ௬௪-லெத்தகிராப் படத்துடன்
- ஸ்ரீமஹாபாரதம்-௰௮-பர்வம்
- ஆத்மரட்சாமிர்தமென்னும் வயித்தியசாரசங்கிரகம்
- ஸ்ரீமகாபாரதக்கீர்த்தனைகாலிகோ பவுண்டடன்கிரயரூபாய்-௩௨
- ஸ்ரீமத்கம்ப ராமாயணவசனம்
- பிரமோத்தரகாண்டம் மூலமும் உரையும்
- ஸ்ரீவிஷ்ணுபுராணவசனம்
- பதார்த்தகுணவயித்திய அரும் பொருளகராதி
- பதார்த்தகுணசிந்தாமணி
- சதுரகராதி

- அகஸ்தியர்வமதத்துவமென்னும்பஞ்சகாவியநிகண்டு — அா
- தக்ஷிணாமூர்த்திதிருமந்திரம் — ௩ருா
- தன்வந்திரி கலைஞானம் — ருா
- சிமிட்டுரத்தினச்சுருக்கம் — ௩௬ய
- அகஸ்தியர்ஆயுள்வேதம் — ௩உா
- மேற்படியார்பாலவாகடம் — ௩ா
- தன்வந்திரிவைத்திய சிந்தாமணி — ௩உா
- சினேந்திரமாலை
- அராபிக்கதை-௩-வாலம்
- நளவீமபாகசாஸ்திரம்
- சீறுபுராணம்
- ஐந்துபடைப்போர்
- கசசுல்லன்பியா

☞ ஸ்ரீமகாபாரதவசனமும், ஸ்ரீமகாபாகவதவசனம்-௰௮ சித்திர விசித்திரலெத்தகிராப் திருவுருப் படங்களுடனும், ஸ்காந்தபுராண வசனமும் ஸ்ரீகம்பநாட்டாழ்வார்செய்த கம்பராமாயணக்கவி சப்தகாண்டங்களுடனும்அச்சிட்டுக்கொண்டுவருகிறோமாதலால் வேண்டியவர்களுக்குவிலைசகாயப்படுத்தி கொடுக்கப்படும்.

ஸ்டாம்பு அனுப்பினாலல்லது பதில்கடிதம் அனுப்பப்படமாட்டாது

மல்லூருஆற்காடுதன்னில் பறைச்சி
மாசாவைக்கண்ணாலேகண்டானேகான்
மாசாவைக்கண்டுமயலாகி நல்ல
மதனதுரைகான்சாய்புஆள்விட்டுப்பேசி
மாசாவைகல்யாணஞ்செய்தான் அப்போ
மதுராபுரிக்கோட்டைக்குவந்துதடாயோகம்
திரும்பினான்ஆற்காட்டுவெளியில் கானன்
செயங்கொண்டுவரக்கண்டுசிரானதுரைமார்
விரும்பியேசந்தோஷமாகி துரைமார்
விருணமதுரைக்கும்தானென்றுசொன்னார்
அதுசேதியர்க்காருஞ்சொல்ல அப்போ
அதிவீரன்மம்முதலிநபாபுதுரைசொல்வான்
சதுர்மகனேதுரைபெரியபிரட்டா நான்
தயவாகவொருசேதிசொல்லுகிறேன்கேளு
கும்தான்கலகமொருபக்கம் பிரட்டா
கூருசாய்புகலகமோசொல்லக்கூடாது
வர்பமாயமயலாடிக்கள்வர் பயமும்
மர்திமெய்யர்களைகமும்சொல்லப்போகாது
மறவர்குடிபொருந்தநததேசம் அந்த
மதுரைக்கனுப்பினால்மோசம்வருமென்றான்
திறமிகும்துரைபெரியபிரட்டன் நா?ப்பு
தேவடியிலேயிருந்தேதுசொல்லலுற்றான்
பனிரண்டுவருஷங்களாச்சு அந்தப்
பாண்டியன்பதிசீமைதன்னரசுவிட்டு
இனிநமதுகானுதனையனுப்பி சிமை
யெல்லாமடக்கியொருகுடைக்கீழ்நிறுத்தி
வடக்கேவந்துபயணஞ்சேரும்படியாய் இவனை
மதுரைக்கனுப்பினால்வசமாகுமென்றான்
இடமாகமம்முதலிசாய்பு அப்போ
சிந்தைதனிலெண்ணியாலோசனைபண்ணி
புவனமெல்லாபுகழ்பெரியபிரட்டா நல்ல
புலிக்குட்டிநபாபுநான்சொல்லுகிறேன்கேளு
இவனைமதுரைக்கனுப்பிவைத்தால் நனை
யெதிராளியாவனேதிரிசினாபள்ளிக்கு
கானனையனுப்பவேண்டாமென்றார் அப்போ
கர்னல்துரைபிரட்டன்நபாபைப்பார்த்து
நான்வளர்த்தபிள்ளையந்தக்கானன் சாய்பு
நம்மோடெதிர்த்தவன்சண்டைக்குவந்தால்
எண்ணியெட்டுநாளைக்குள்ளாக நெருப்பா
யெரித்துநான்மதுராபுரிபிடித்திடுவேனென்றான்
புண்ணியநபாபுதுரைபார்த்து பிரட்டாவுன்
புத்திக்குச்சரியானபடியென்றுசொல்லி

கானுதனைபக்கத்திலழைத்து   நபாபு
    கனகமாகத்தாம்பூலங்கையிற்கொடுத்து

நானும்உனையனுப்புகிறேன்தெற்கே   எனக்கு
    ரண்டகஞ்செய்யாதேயென்றார்நபாபு

கானனுமனதுமகிழ்வெய்த   பிரட்டன்
    கனபிரியமாகவேயேதுசொல்வானும்

காயிதங்கைதனிலேகொடுத்து   சாமி
    காரியங்கண்ணாகப்பார்த்துச்சொல்லி

நேயமுடன்நடமதுரைக்கென்று   பிரட்டன்
    நிசவுறுதியாய்ச்சொல்லிஅரண்மனைபோய்ச்சேர்ந்தான்

சேர்ந்தவுடன்கானுதுரைதானும்   பிரட்டன்
    திடவுறுதிச்சொன்னபின்வெளியிலேவந்து

மாசாவைக்காடியின்மேலேற்றி   சேனை
    மருங்கில்நெருங்கிவரக்குதிரைமேலேறி

ஆசாரவாசல்வழிதாண்டி   நல்ல
    அழகானசென்னைபுரிகோட்டைவெளிதாண்டி

திருச்சினாப்பள்ளிகோட்டைதாண்டி   கானு
    செயனுகைமங்களம்விராலிமலைதாண்டி

வரிசையாய்மணப்பாறைகடந்து   தோகை
    மலைதாண்டிநம்மன்குரிச்சியிலிறங்கி

நம்மன்குரிச்சிப்பூச்சேனையழைத்து   கானு
    ராஜாதிபதியவனுக்கேதுசொல்வானும்

கனமையாகஉனதுபேரும்சேனை   தன்னில்
    கள்ளாபயமேதடாகாடுவழிதன்னில்

இராப்பகலாய்பாளையம்வருது   இனிமேல்
    இவ்விடந்தன்னில்களவுநடந்துதேயானால்

தப்பாகநீயிருக்குந்தேசம்   எல்லாந்
    தவிடுபொடியாக்கிரணதூளியாயடித்து

எவனெவனிருந்தாலும்பாரேன்   உன்னை
    ஏழுமலைக்கப்பாலேபிரட்டுவேனென்று

அவனைபயப்படுத்திவழிபதனம்   என்று
    அதட்டிவனுப்பேசிநடத்திட்டானப்போது

துவரங்குரிச்சியதுதாண்டி   உயர்
    கோசிக்குரிச்சியெனும்நத்தம்வந்துசேர்ந்து

நத்தத்துலிங்கனையழைத்து   கானு
    நலமானஒருசேதிதிடமாகச்சொல்வான்

கள்ளர்பயமிக்காட்டில்மெத்த   வென்று
    கனமானநபாபுதுரைசொன்னாரடாபாவி

எள்ளளவுபாதைவழிதனிலே   லவுண்டி
    இனிமேலுபாதையிலேகள்ளர்பயமானால்

எட்டுநாளையில்கச்சைகட்டி உன்னை
 ஏலேலோதூக்கிலேபோட்டிடுவேன்கள்ளர்
மட்டுள்ளவழிபாதைபதனம் என்று
 மன்னன்வருகிறான்திசைமதுரைநோக்கி
அழகர்மலைக்கொம்பையுந்தாண்டி நல்ல
 அழகானதேனூர்மைதானவெளிதாண்டி
தளம்பெரியநாள்சேனைசூழ நல்ல
 சவுர்யமுடனேநல்லகுளமதிலிறங்கி
கொடிமுரசுதம்பூரடிக்க நல்ல
 கோட்டமிடுதனதுவகைபட்டாளஞ்சூழ
துடியாகவர்ன்முகடதிர நல்ல
 தோகையர்கள்நடனமிடுவெண்கவரிவீச
கும்பின்முரசுவெள்ளைக்காரர் தளமும்
 கூட்டிமதுராபுரியில்லுயிலாகச்சேர்ந்தான்
இப்புவியெலாஞ்செவிடுபடவே பீரங்கி
 இருபத்தொருவேட்டுதீர்த்தாநகர்தன்னில்
கோடைகாலத்திடிகள்போலே வைத்துக்
 கொளுத்தினான்பீரங்கிசொல்லக்கூடாது
வாடைமலர்மதுரைநகர்தன்னில் வாழும்
 மதிகூடுசாயபவன்எறிட்டுபார்த்து
பேசியிளங்கர்போச்சுதென்று தளப்
 பெருக்குடனேதிருச்சினுப்பள்ளிகோட்டைசேர்ந்தான்
மதயானைதுரைகானுசாய்பு சேர்ட்டை
 மதுராபுரியலங்கரித்துநின்றுபார்த்தான்
கதையானமதுராபுரிக்கோட்டை தன்னில்
 சூரமும்வீரியமுஞ்சொல்லமுடியாது
தேங்காய்தண்ணீரலைமோதும் துய்ய
 சிறுமல்லிப்பூசொரியுந்திசைமதுரைக்கோட்டை
மாங்காய்காய்த்துகுலையுதிருஞ்சோலை நல்ல
 மங்கையர்கள்பந்தடிக்குமணிமதுரைவீதி
வெள்ளானைவிளையாடுமதுரை நல்ல
 வெண்கதலிக்குலைநெருங்குமிகமதுரைசோட்டை
விள்ளமிர்தஞ்சொரியுந்திசைமதுரை நீண்ட
 வீதிகளெல்லாங்கதம்பவாசமதுவீசும்
மந்தாரைமுல்லையிருவாட்சி செண்பக
 மலர்சொரிந்துதேனொழுகுமணிமதுரைக்கோட்டை
நந்தாதிமணிமேடைவீதி நல்ல
 நவமணிகள்குவித்திருக்குநல்லமதுரைக்கோட்டை
வாழைகுலைசாய்ந்திடுமதுரை நகரில்
 மந்திரிகள்பிலாக்கனியைமத்தளங்கொட்டும்

தாழைதனில்மயில்த்தோகையாடும் வண்டு
தான்கீதம்பாடிமலர்வாசத்தைத்தேடும்

எழுபத்திரண்டுகொத்தளமாம் கிணற்றில்
எழிலானகயல்குதித்துத்திரிந்துவிளையாடும்

வழுதிசேரதிசயங்களனைத்தும் வாயால்
வழுத்தமுடியாதுமனமகிழ்ந்துபார்த்திருந்தான்

இருந்ததொருகான்சாய்புலீலன் நல்ல
இயல்பாகப்பின்னுமவனேதுசெய்வானும்

நானூறுபொன்கையில்கொடுத்து அந்த
நாழியில்மீனாட்சிக்குச்சிறப்புசெய்யச்சொல்லி

பானுவதிசூடுமீனம்பாள் பாதம்
பணிந்துசொக்கேசனையும்வலமாகவந்து

கர்த்தாக்கள்வந்திருக்குமேடை அந்தக்
கருங்கல்லுச்சவுக்கையிலேஒயிலாகச்சாய்த்து

மீனாட்சிகிருபைகளினாலே நல்ல
வெங்கலக்கதவுதனைப்பேர்த்தவனெடுத்து

தீரனெனும்கான்சாய்ப்புதுரைதான் அதிலே
வெகுகோடிதிரவியமிருக்கமனமகிழ்ந்து

விஸ்தாரஅரண்மனையுங்கட்டி அதிலே
மேல்விடுமாளிகையுந்தானுண்டுபண்ணி

அரண்மனையில்மகிழ்வாகவிருந்து பின்னும்
ஆறேழுநாள்பொறுத்துயோசனைகள்செய்து

பிறமலையின்மேல்ச்சாரியென்று கானு
பேசியைந்துமணிவேளைபயணமென்றுசொன்னான்

சொல்லியேபாளையத்தைநடத்திச் சென்று
சூழவேபிறமலைநாட்டாரைவளைத்து

வில்லிலருச்சுனன்போலே பார்த்தீ
விடமெல்லாம்பிணக்காடாய்வெட்டியிழுத்தெறிந்து

அடங்காதபிறமலைநாட்டாரை வளைத்து
ஆறுபொதிதலைவெட்டியடக்கினான்கானும்

ஒடுங்காதமயிலாடிக்கள்ளர் தன்னை
ஊருக்குயிருபேரைக்கீர்த்தியாய்வைத்து

வட்டிகொண்டுகுடமுடஅடித்து கானும்
வழிமீதில்பதின்மூன்றுவராகனையெறிந்தான்

எட்டியதைப்பார்க்கமுடியாது அதிலே
ஈயெறும்புமொய்க்காமலிருந்துதடாபணமும்

குளாயானுமருகில்நெருங்காது நல்ல

கருக்குருவியதின்பேரிலிருக்கமுடியாது
கட்டாமலையடித்துவிட்டான் காட்டிக்
கருக்குருவிமாடுமேச்சுவரலாச்சுமதுரை
ஒருநாளறுத்தபிணமெல்லாம் காணும்
ஒன்பதுநாள்வரைக்குமுலர்த்தியேபோட்டான்
கட்டேதுகாவலறியார்கள் தேசங்
கறந்தபால்வெளிவைத்தால்காகமணுகாது
மாசாமேலாணையிட்டபேர்க்கு அந்த
மறியவிலேநின்றவர்க்குவெகுமதிகள்கொடுப்பார்
கூசாமலாணைமிஞ்சினேனை பிடித்துக்
கொண்டுவந்தேழுபேரைத்தூக்கிலேபோட்டான்
வருகையிலேகும்தாவென்றுவந்தான் அந்த
மதுரைக்குவந்தபின்புராசாவுமானான்
இருகையிலும்பணமேந்திக்கொண்டு காட்டி
லிசைந்துவழிநடக்கவேயிருந்தரசுசெய்தான்
இரட்டப்பநாய்க்கன்வணங்க நல்ல
இரிசப்பநாய்க்கனுங்கண்டுசந்திக்க
கட்டபொம்பனுய்க்கனும்வணங்க அந்தக்
களக்காட்டூர்வன்னியன்கண்டுசந்திக்க
சாத்தூருநாய்க்கன்வணங்க நல்ல
சன்னப்பநாய்க்கனுஞ்சொற்படிசேழ்க்க
சேத்தூருமுடிமன்னன்வணங்க நல்ல
சிவகிரிவன்னியன்கண்டுசந்திக்க
தலைவெட்டியய்யையன்வணங்க நல்ல
தனுவேந்தன்கச்சைகட்டித்துரைமகன்வணங்க
வலையபட்டிகாமையன்வணங்க அந்த
வடக்காத்தன்புலிதேவன்சொற்படிகேழ்க்க
தும்பிச்சிநாய்க்கன்வணங்க நல்ல
துடிவளருங்கலங்காதகண்டனும்வணங்க
ஒன்பதூர்க்கூளையான்வணங்க மதி
யூகியெனும்அப்பாஜிகவண்டனும்வணங்க
காணுதமலையாளத்துராஜன் ஏழு
காராணைகொடுத்தனுப்பிக்கப்பமுங்கட்ட
நாணுதவிருதுபாட்சிவணங்க நல்ல
நலங்கொண்டஅனுமந்துசொற்படிசேழ்க்க
நத்தத்துலிங்கையன்வணங்க நல்ல

நமன்சூரிச்சிப்பிச்சேயன்கண்டுசந்திக்க
முத்தையன்மூப்பன்வணங்க நாளு
முனைகொடுத்ததென்மலைவன்னியன்வணங்க
இணங்காதவுத்தமன்வணங்க இப்படி
ஏழரைவருஷமிதிலிருந்தரசுஆண்டேன்
வணங்காதபேரெல்லாம்வணங்க அந்த
மறவருடதளகர்த்தன்வணங்கவரவில்லை
அடிக்கிறேன்மறவன்மேல்சாரி நாளை
பிடிக்கிறேன்திருப்பூவனக்கோட்டையென்றுசொல்லி
எழுத்தாணிகையிலேபிடித்து காணும்
இயல்பாகவக்கணையாயெழுதுகிறானப்போ
முடிமன்னுசேதுபதிதளவா நல்ல
முனைவீரதாமோதரபிள்ளையேகேளும்
அரோபாய்தாமோதரபிள்ளை உன்னுடைய
அசையாதபள்ளிமடைகொடியைவிடுபாவி
திருப்பூவனம்விட்டுவிடவேண்டும் உன்னுடைய
செல்வமுள்ளபாத்திபனூர்விட்டுவிடவேண்டும்
திருப்பூவனம்விட்டுவிட்டாயானால் உன்னுடைய
சிவகங்கைமேல்கத்தியெடுக்கிறதேயில்லை
திருப்பூவனம்கொடுக்காமற்போனால் நல்ல
சிவகங்கைமேல்சாரிவரவேண்டாமென்று
வகைவிபரமாகவேயெழுதி அப்போ
பங்காருநாய்க்கன்வசமனுப்பிவிட்டான்
வருகிறான்மனலூருதாண்டி அந்த
வகையானதிருப்பூவனகோவலூர்தாண்டி
சிங்காரமாகவேநடந்து நல்ல
சிவகிரிபொன்னுங்குளமதுகடந்து
சிவகங்கைபேட்டைக்குநுழைந்து நல்ல
தீரனெனுந்தாண்டவன்கையில்கொடுத்தான்
விருப்பமுடனெழுதியகாயிதத்தை பாதந்
விறல்பெருகுசிவகங்கைமறவர்தளகர்த்தன்
காகிதவக்கணையைப்பார்த்துக் கோபா
தான்மீறித்திருப்பூவனக்கோட்டையில்வந்து
திண்டுதிமாசுமேற்சாய்ந்து நல்ல
திடமாகவோலையைச்சிராப்படித்து
தாண்டவராயதளபந்திரி கோபந்

தான்மீறிமறுதிருபந்தானெழுதினனே
வேண்டாமடாதுரைகானுமுல்லே நானும்

வேளாளனொருவுறுதிசொல்லுகிறேன்கேளு
நெல்லூர்சிராப்பளியிலிருந்து நீயும்

நேற்தெற்கேமதுரைக்குவருகிறபோது
சொல்வார்கள்கும்தானென்று இப்போ

துடிவளருமதுரைக்குத்துரையானுய்நீயும்
மச்சினனென்றுவுரவாடி உன்னுடைய

மாதாவைத்தங்கையென்றுவுரவாடியிருந்தேன்
முச்சிருவுடுப்புநான்கொடுத்து உனக்கு

முதல்வரிசைமதுரைக்குக்கொடுத்தனுப்பிவிட்டேன்
மதுரையிலேயுனக்குமகன்பிறக்க என்னுடைய

மாணிக்கச்சிவகங்கைசர்க்கரைவணங்க
எதிராதேநெஞ்சந்துணிந்து கானு

என்னுடையதிருப்பூவனங்கேழ்ப்பையோவென்று
எழுதியேகாயிதந்தன்னில் அப்போ

இயல்பானசேவகர்கையில்கொடுத்தனுப்ப
மதுரைகான்சாய்ப்புகையில்கொடுத்தார் அந்த

மதயானைகான்சாய்புவூசித்துப்பாத்து
மதிமந்திரிதாண்டவராயா கானு

மதயானையொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
வேலூருவிசலூரிலிருந்து நானும்

விருகமதுரைக்குவந்ததின்பிறகு
எனைக்கண்டுவணங்காதபேணை நீபோ

யெரித்துநிர்த்தூளிப்படலமாய்நொறுக்கி
பனையூருமாங்காய்பிடுங்கி நானும்

பத்துகிலேவழிப்பாதைமடிமாங்காய்போட்டு
ஒருமாங்காயதிலேகுறைந்தாக்கால் பாதர்

ஒன்பதுகாய்வட்டிவாங்கினேன்சிங்கம்
தருவோங்குஞ்சிக்குந்தாமலையில் பாதை

தன்னில்வெகுதிரவியத்தைமுடிந்துநானெறிந்தேன்
எழுநாளப்படித்தானே அதிலே

ஈமெறும்புபொய்க்காமலிருந்துதடாப்பணமும்
காளுமதிலேறுதுகளையான் அதிலே

நலியாதுகருக்குருவினாடாதுபணத்தில்
அப்படியடித்தேன்துரைகானு எனக்கு

ஆடாபனங்காட்டுமறவனே எதிரி
என்றுசொல்லிகான்சாய்புநீலன் நன்றாய்

எழுதியேகாயிதத்தைதிருப்பூவனமனுப்ப
வந்தவொருகாயிதந்தன்னை நல்ல

பரிசைபெறுவேளாளன்பார்த்தேதுசொல்வான்
அடாயிப்படிசொன்னியேநீகானு நல்ல

தாகட்டுமொருவபணஞ்சொல்லுகிறேன்கேளு
குடிக்கிறதுபனங்காட்டுக்கள்ளு மறவர்

எடுக்கிறதுஉடன்காட்டுமொக்குவளைதடிதான்
அடிக்கிறதுகரண்டாக்கல்பாத்து நாங்கள்

பிடிக்கிறதுகொண்டமயிர்தப்பாதுசொன்னேன்
நாங்களடித்துப்பறியாவிட்டால் எங்கள்

நலங்கொண்டகாடுமெட்டுமடித்துப்பறித்திடுமே
தாங்கியிங்குவருநகிலேயாதே உன்னை

கூதணத்திலேவீசுடுவேனென்றான்வேளாளன்
இன்னம்பலபலசேதியெழுதி அவனும்

இயல்பாகவனுப்பினன்மதுரைநகருக்கு
வந்துதேமறவருடநிருபம் கானும்

வாசித்துப்பார்த்துமவனேதுசொல்வானும்
இத்தனைவீரியங்கள்சொன்னால் பயலே

இனிமேலுங்கானுதுரைசொல்லுகிறேன்கேளு
வெத்திலைகொழுந்துகிள்ளுஞ்சாதி நீயும்

வேளாளவம்மிசம்முல்லைமனிமார்பா
மேழிபிடித்துழுஞ்சாதி பாரில்

விளங்கவேயெழுத்தாணிபிடித்தெழுதுஞ்சாதி
நாளுங்கொடிக்கால்பார்க்குஞ்சாதி நீங்கள்

நதிகுலமென்றேயிராச்சியங்களறியும்
பட்டோலையெழுதுமுங்கள்ஜாதி உனக்குப்

படைவெட்டத்தெரியுமோதாண்டவராயா
இப்படிகான்சாய்ப்பெழுதியனுப்ப அதற்கு

எதிர்நிருபமெழுதுகிறான்தாண்டவராயன்
பட்டோலையெழுதுகிறதென்று நல்ல

பரிநகுலதுரைகானுசொன்னையேவுன்வாக்கால்
மாறுநாட்டோலையினனன்னை இந்த

பாமரத்துக்கிளையில்தூக்காமல்விட்டால்
சந்த்ரகுலமுத்துவடுகையா உங்கள்

சாமியுடவாசல்பிரதானிநாநல்ல
மீறுபுகல்வேளாளனல்ல சிங்கம்

விரித்ததுவுந்திவாசுக்கம்பளியுமல்ல
பிடித்ததுவுமெழுத்தாணியல்ல சிங்கம்

போட்டதுவுந்தளகர்த்தமோதிரமுமல்ல
விசையனெனுந்தாண்டவராயன் சிருபம்

எழுதியேயனுப்பிவிடக்காணுதுரைதானும்
வந்தவொருகாபிதந்தன்னை நல்ல

வரிசைபெறுகான்சாய்புபார்த்தேதுசொல்வான்
இந்தமொழிசொன்னபிபயமேலே நானும்

இன்னமொருசம்பிரதாயஞ்சொல்லுகிறேன்கேளு
கர்த்தாக்களமர்ந்திருக்குமேடை நல்ல

கருங்கல்லுச்சவுக்கைதனைப்பேர்த்துநான்பார்த்தேன்
பத்தாயந்தனிற்பணமுமிருந்து அதினில்

பதிவானபட்டயமுமெழுதியிருந்ததடா
இரட்டைவெங்கலக்கதவுநிலைதான் அதிலே

நோய்கிடக்குதென்றுஎழுதியிருந்ததடா
இதம்பெறவேசேனைகளைக்கூட்டி அந்த

எழிலானவெங்கலக்கதவுநிலையெடுத்தேன்
கதவுநிலையாகவைத்தாண்ட அதி

கர்த்தாக்கள்முன்னதிலேபோட்டிருந்ததடா
தென்புறத்துவரிக்கல்லுமேலே கோடி

திரவியமிருக்குதென்றெழுதியிருந்ததடா
இதற்குவகையேதென்றுஎண்ணி நானும்

இயல்பாகமனதிலேயோசனைகள்செய்து
ஐம்பதுபேர்தச்சர்களையழைத்து நானும்

அரைக்ஷணத்திலாறுவரிக்கற்பிழிறக்கி
திரவியத்தைப்பேர்த்தெடுக்கையிலே அதிலே

திசைமதுரைக்கர்த்தாக்களெழுதியிருந்ததைகேள்
பரமேஸ்பரிமீனுளுக்கெதிரே வாயிற்

படியில்வெகுதங்கப்பாளமிருக்குதென்றிருக்க
இப்போதுதிசைமதுரைமீனுள் தாயே

எனக்கிந்தத்திரவியத்தைக்கொடுக்கவேணுமென்றேன்
அப்போதுதிசைமதுரைமீனுள் எனக்கு

அறியவேயொருவயணஞ்சொன்னதைக்கேளு
மலைக்காதேதுரைகாணுநீலா நானும்

வைத்திருக்குந்திரவியத்திலாசையாயிருந்தால்
தலைச்சன்பிள்ளைபெண்பிறந்தமங்கை அவளும்

தலைச்சன்பிள்ளையுண்டாயிருக்கவேணுமென்று
பிராமணத்திபெண்கொடுத்துவந்து எனைக்குப்

பெலிவெட்டிப்பொங்கலிட்டுக்கொடுப்பையேயானால்
திரவியமிருக்கிறதைநீயும் தானு

திடமாகவெடுக்கவென்றுஉத்தரவுமாச்சு
ஆகட்டுமென்றுசொல்லினானும் அப்போ

அன்பாகஆள்விட்டுவிசாரித்துப்பார்த்தேன்
நாலுமுகம்ஆள்விட்டுப்பார்த்தேன் அப்போ

நலங்கொண்டசோழநகர்தன்னிலிருந்தான்
எழுநூறுபொன்கையில்கொடுத்து நானும்

எழுபேர்சிப்பாயிவிட்டுத்தன்னிவரச்சொல்லி
நற்பெலிவாங்கிக்கோதேவி என்று

ராஜாதிகையினால்வெட்டினேன்காணு
திரவியத்தைப்பேர்த்தெடுக்கையிலே அதிலே

செப்புநல்லபட்டயமுமெழுதியிருந்ததடா
புட்பவனம்திருப்பூவனமும் உன்னுடைய

புகழானபள்ளிமடைமதுரையுடன்சேர்க்கை
தேவர்கள்பூசைபண்ணுங்கோட்டை என்னுடைய

திருமதுரைச்சேர்க்கையுன்திருப்பூவனக்கோட்டை
சிவகங்கைபட்டணமுநல்ல என்னுடைய

சிரானமதுரைக்குப்பண்ணைக்கிராமம்
வயிடூரியக்தங்கம்விளையும் உன்னுடைய

மாணிக்கப்பாத்திபணூர்மதுரையுடன்சேர்க்கை
திருச்சுளிப்பள்ளிமடையெல்லாம் முன்னே

திருமலைக்கர்த்தாக்களாண்டிருந்ததேசம்
இப்படிவிபரமாயிருக்க நீயும்

வீணிலேதிரிந்தலைந்துபோகாதேவேண்டாம்
விட்டுவிடுதாண்டவாயா சும்மா

வீணிலேபழியேர்க்கப்போகாதுசொன்னேன்
எட்டுவருஷகாலமானாலும் நானும்

எதிராடித்திருப்பூவனம்வாங்குவேன்பாவி
என்றெழுதியர்க்காருகையில் காணு

இயல்பாயனிட்பினன்திருப்பூவனம்நோக்கி
வந்ததொருநாயிதந்தன்னை முல்லை

வேளாளன்வாசித்துயோசனைகள்செய்து
என்னுடையராச்சியமென்றறிந்தும் நீயும்
இப்படிக்கெல்லாமெழுதினையேதுரையே
கனமானமகுடமுடிமன்ன முல்லை
காராளனொருவார்த்தைசொல்லுகிறேன்கேளு
மைத்துனகான்சாய்ப்புலா ஒரு
வார்த்தைநான்காராளன்சொல்லுகிறேன்கேளு
மதுராபுரிபிறக்கைபிலேகானு எங்கள்
மகாபூவனலிங்கமதுகூடப்பிறந்ததடா
சதுர்மதுரைக்கோட்டைபிறக்கையிலே மறவ
சமஸ்தானங்கூடப்பிறந்ததடாகானு
மதுராபுரிக்கோட்டைபிறக்கையிலே இதுவும்
மறவருடமண்ணிதென்பார்கேட்டுக்கொள்கானு
முடிக்கிறாய்சம்பிரதாயம்வீணில் செம்பொன்
முடிமன்னன்திருப்பூவனக்கொடியுனக்குவருமோ
குடிக்குமேபூனையந்தப்பாலை அதனைக்
குடிக்கவென்றுநினைத்தாலும்வலதுகாலாலே
தட்டிக்கவிழ்த்திடுவேன்கானு உன்னுடைய
சம்பிரதாயங்களைநிறுத்திவிடுசொன்னேன்
மன்னனெனுந்தாண்டவராயன் எழுதி
மதுராபுரிதனக்கனுப்பிவிட்டானப்போ
வந்தவொருகாயிதந்தன்னை அந்த
வள்ளலெனுங்கானுதுரைபார்த்தேதுசொல்வான்
அரேபிள்ளைதாண்டவராயா பாதர்
ஆண்பிள்ளைகான்சாய்புசொல்லுகிறேன்கேளு
கெட்டியாயிவ்வயணஞ்சொன்னாய் சிங்கம்
கிரீடிநான்துரைகானுசொல்லுகிறேன்கேளு
சிந்தையுடன்முல்லைமணிமார்பா அந்தத
திருப்பூவனங்கொடுப்பதில்லையென்றுயேபாவி
வந்துநிர்த்தூளியாயடித்து திருப்பூ
வனம்வாங்கிசிவகங்கைகம்பளிவிரித்து
கொடித்தலமெல்லாங்கொள்ளையடித்து உன்னுடைய
கெம்பீரபார்த்திபனூர்தோரணங்கட்டி
அடித்துவுனைக்கைப்பிடியாய்ப்பிடித்து என்னுடைய
அங்காளம்மன்கொத்தளத்தில்காவல்வைக்காவிட்டால்
வீராதிவீராணசூரன் ஜனல்

வெள்ளைக்காரன்வளர்த்தெடுத்தபிள்ளையோநானும்
மாலானகான்சாயபுசீலன் தனது
மைத்துனன்தாண்டவராயனுக்கனுப்ப
வந்தநெறாருநாயிதந்தன்னை அந்த
மன்னனெனு ; வேளாளன்பார்த்தேதுசொல்வான்
போராடத்துணிந்தியேகோனு நல்ல
புலிக்குட்டியொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
திருப்பூவனங்கேட்டையேயானல் வடக்கே
திருச்சினாப்பள்ளிக்கோட்டைசீராய்நடந்து
பருப்பதப்பொன்வெளியிறங்கு நம்மிட
பாட்சாநபாபுதன்பேட்டிநான்செய்து
லாட்டுமேலாட்டையுமழைத்து நல்ல
நலமானநீர்மேல்நெருப்பையுமழைத்து
லாட்டமுடன்றம்பிலியைக்கூட்டி கர்னல்
மாட்டியன்மேஜர்துரைஜன்னலையழைத்து
சின்னப்பிரட்டணையுங்கூட்டி நல்ல
கேமல்துரைமுசியாப்பறங்கியையழைத்து
ஜென்னல்வெள்ளைக்காரனையுங்கூட்டி நல்ல
ஜெயம்பெற்றபிரட்டணையுங்கையோடேயழைத்து
முப்பதுபட்டாளத்தைத்திரட்டி நல்ல
முடிவேந்தன்வண்டியூரில்கூடாரமடித்து
ஐப்பசிமாதத்திற்குள்ளாக உன்னை
அணியானபுளியமரச்சோலையில்தூக்காவிட்டால்
நாகுலசிங்கம்நானல்ல பெரிய
நாலுகோட்டைதளகர்த்தனல்லகாணும்
தேவர்புகழ்முத்துவடுகைய ராஜ
சுங்கம்மகிழதிகாரிநானல்லவென்று
எழுதியேகான்சாய்புக்கனுப்பு நல்ல
இயல்பானகான்சாய்புபார்த்தேதுசொல்வான்
வடக்கேநான்போறேனென்றுசொல்லி மெத்த
வலுவாகச்சொன்னியேநீதாண்டவராயா
வட்கையுமென்னுடையமனிதன் அதிலே
வரிசையுடனிருக்கிறான்துரைபெரியபிரட்டன்
பிரட்டனொருதலையிருக்குமட்டும் சிங்கம்
பிடிப்பாண்டாயெப்படியுந்திசைமதுரைக்கோட்டை
பிரட்டனொருதலைபிளந்துபோனல் நானே

பருமனெடுத்தருஞ்சல்லேபாபுசாய்பு
திருச்சிணப்பள்ளிக்கோட்டைமுதலாய் அடித்துத்
திசைகப்பநாட்டிவயதோரணங்கட்டிடுவேன்
துரைசிங்கம்சமர்த்தையறியென்று நல்ல
துடிவளரும்துரைகானுவாக்காலேசொல்லி
சொன்னதொருசேதிகளையெல்லாம் கானு
துடியாகக்காயிதத்தில்கண்டேயெழுதி
வாவிட்டான்கான்சாய்புநீலன் நல்ல
மங்கையர்வேள்தாண்டவன்மனதினுட்கொண்டு
இன்னுமொருயோசனைகள்செய்து நல்ல
இதமுடனேவேளாளனேதுசொல்வானும்
கங்கைகுலதாண்டவராயன் நல்ல
கன்னிகைமாசாவின்மனதறியவெண்ணி
தங்கச்சிமாசாவேகேளு உனது
தன்கணவன்சேதிதனைக்கேழ்க்கிலையோதங்காய்
திருப்பூவணங்கேழ்க்கிறான்தங்காய் உன்னுடைய
செல்வமுள்ளபாத்திபனார்கேழ்க்கிறான்தங்காய்
திருப்பூவணம்விட்டுவிட்டிடுவேன் நானோ
சிவகங்கைகுடியிருப்புநிலைக்கவொட்டான்கானன்
என்றெழுதிகாயிதத்தையனுப்ப நல்ல
இயலானமாசாவும்பார்த்தேதுசொல்வாள்
அண்ணேநீதாண்டவராயா தங்கச்சி
அன்பாகவொருவசனஞ்சொல்லுகிறேன்கேளு
சிங்கத்தின்குட்டிநீயண்ணே இதற்குச்
சிந்தைதனிலேநீங்கள்கவலைகொள்ளவேண்டாம்
தங்கையாய்நானிருக்கும்போது உந்தன்
தலைசீமைக்கொருநாளும்அழிவுவராது
சொல்லியும்கானுதுரைவந்தால் உனக்குத்
தோரணச்சீட்டெழுதித்தருகிறேனென்று
பவளம்போற்சிவந்திடும்வாயால் நல்ல
பைங்கொடியெழுதினதைதாண்டவராயன்
பார்த்துமனமகிழ்ச்சியாயிருந்து நல்ல
பண்பாகச்செங்கோல்செலுத்துவருநாளில்
மதுரைநகர்கான்சாய்புதுரையும் அப்போ
மண்டலிகன்யோசித்துயேதுசெய்வானும்
ஏழுமணிவேலையிலேகானு அப்போ

எழுந்திருந்துமாசாவினரண்மனைக்குள்வந்து
முடிமன்னன்துரைகாணுசாய்பு மகுடம்
மோகமிகுமாசாவைஏயதிட்டிப்பார்த்து
அடிபெண்ணேதுரைமகளேமாசா காணன்
ஆண்பிள்ளையொருவபணஞ்சொல்லுகிறேன்கேளு
மலையாளம்பார்த்துவரவேணும் பெண்ணே
மன்னாருகோவிலும்பார்த்துவரவேணும்
இப்படிகாணுதுரைசொல்ல மாசா
ஏறிட்டுப்பார்த்தவனுக்கேதுசொல்வாளாம்
மலையாளம்போய்பார்த்தபேர்கள் அங்கே
மாண்டவர்களல்லாமல்மீண்டவர்களில்லை
வேசிபெருத்ததுவுமதுரை நல்ல
வெள்ளாட்டிபெருத்ததும்தட்சணபூமி
வாசமுடனென்முகம்பாராமல் சாமி
மறுமுகம்மதுரையிலேபார்த்தகாலத்தில்
மதுராபுரிக்கோட்டையுமாண்டு நீயும்
வயணமாய்செங்கோல்செலுத்தவுமாட்டாய்
எதிராடிவடக்கேபகையாதே நமது
ஈஸ்பரநாபுதுரைசேதிதெரியாதே
மேற்கேபகையாதேதுரைமகனே அந்த
விருதுபெற்றஜைதரொன்றால்பொல்லாதவண்டன்
ஏற்கவேதெற்கேபகையாதே அதிலே
எழுதண்டிகைக்காரர்பொல்லாதபோக்கர்
கிழக்கேபகையாதேதுரைமகனே அந்தக்
கீழ்க்காட்டுமறவருடசேதிதெரியாதோ
பழக்கமாயிருபேருமிருந்தால் நானும்
படைமதுரைக்கொருநாளுமெதிரொருவரில்லை
என்றுமாசாவும்புத்திசொல்ல காணு
இயல்பாகமறுத்துமவனேதுசொல்வானும்
இப்படிசொன்னியடிபெண்ணே காணு
இன்னமொருசம்பிரதாயஞ்சொல்லுகிறேன்கேளு
டப்பைப்பாளையக்காரர்வணங்க விருது
ராஜசேகரியென்றுராஜர்திறையளக்க
முனைகொடுத்தபறங்கிமலைக்கோட்டை தன்னை
மூன்றுநாளைப்பொழுதில்வாங்கினேனானும்
பனங்காட்டுமறவனெனக்கெதிரோ நானே
பார்க்கிறேனவன்சமர்த்தைபாரடிபெண்ணே

பனிரண்டுவருஷமாகனும் நானும்
பார்த்திபனார்த்திருப்பூவணம்பிடித்திடுவேனென்று
குடிநகுலநான்சாய்புசொல்ல அப்போ
திலோர்த்தமையெனும்மாசாயேதுசொல்வாளாம்
இனியொருமெதிரில்லையென்று நீரும்
இப்படிசொல்லலாமோகான்சாய்புதுரையே
இலங்காபுரிக்கோட்டையாண்டு முன்னே
இருந்தானேஇராவணன்பத்துசிரசோடே
துலங்குமகாமேருதனையெடுத்தான் அவன்
துடியானவாழ்வெங்கேபோய்விட்டதுரையே
கற்புடையசீதாதேவியினால் இலங்கைக்
காவலழிந்ததைக்கேட்கலையோதுரையே
அப்படியேமறவருடன்பகைத்தால் நம்மிட
ஆதினந்தப்பாமகெடுபடுஞ்சொன்னேன்
மறவனென்றால்பெரியவீட்டுக்காரன் அதிலே
மறனென்றுடன்பிறந்தபிறவிதானெனக்கு
மறவர்மேர்படையெடுப்பையானால் நானும்
மங்கிலியங்களைந்துதன்மடியின்மேற்போட்டு
மைந்தனையுங்கையோடேகூட்டி நானே
மலையாளம்போய்விடியச்சேருவேனென்று
மாசாவுங்கோபமாய்ச்சொல்ல நல்ல
மதுராபுரிகானுதுரையரண்மனைபோய்ச்சேர்ந்தாள்
நடந்ததோர்சேதிகளைத்துந் மாசா
கலமாகவெழுதியேதாண்டவனுக்கனுப்ப
வஞ்சியர்வேள்தாண்டவராயன் அப்போ
மாசாவின்காயிதத்தைவாசித்துப்பார்த்து
அன்னேரம்வரிசையுடுப்புகளை நல்ல
அன்புள்ளமாசாவுக்கனுப்பவேணுமென்று
மூன்னூறுவுலுப்பைமணிசெய்து நல்ல
முடிமன்னன்னைகொலுசுபொன்னாலேசெய்து
வெள்ளியாலுரிக்காறுசெய்து நல்ல
விலைமதியாவுரிக்கலையம்பொன்னாலேசெய்து
அள்ளியதில்சீனிச்சர்க்கரைபோட்டு நலமாய்
அடுக்கியிருப்பதுவுரியும்அழகாகச்சேர்த்து
தங்கையவளிருந்துவிளையாட நல்ல
தங்கத்தால்பள்ளாங்குழியொன்றுசெய்து

தங்கத்தால்பலகறைகள்செய்து நல்ல
தங்கத்தாலிர்க்கொல்லிபொன்னூலேசிப்பும்
மாசாவுக்குச்சீனத்துாவிக்கை நல்ல
வச்சிரமணிமுக்குத்திபொன்னினுற்செய்து
மாசாவின்மகனுக்கென்றுசொல்லி நல்ல
வயிடூரியக்குல்லாவில்வச்சிரக்கல்லழுத்தி
கானனுக்குமுத்தாலேஅங்கி வச்சிரக்
கல்லிழைத்தமோதிரமுங்கனகாகச்செய்து
இளகுசம்பாநெல்லரிசிதனிலே நல்ல
மூவைந்துபதினைந்துபொதியதுபிடித்து
அழகுசீரகச்சம்பாநெல்லில் அப்போ
ஆறேழுமரக்காலேபவலிடிக்கச்சொல்லி
சரியாகச்சர்க்கரைகலந்து நல்ல
தளமானயாழ்ப்பாணப்பட்டுமெடுத்து
இருநூறுபொன்பெற்றபட்டு ஒரு
இழையிழைக்குச்சரிகையினூற்குச்சுகள்கட்டி
பாற்பசுவும்பாலாடுநடத்தி நல்ல
பண்பானசெங்கரும்புகட்டுபனிரண்டு
சேல்போலும்விழிமாசாமகிழ மதுரை
திசைநோக்கியனுப்பினான்தாண்டவராயன்
வருகுதுமறவருடவரிசை என்று
மதுரைதுரைகான்சாய்புகாதினுற்கேட்டு
தெருவீதிமேடைகடந்து கானு
திருமலைக்கர்த்தாக்கள்சாவடியுந்தாண்டி
சித்திரக்கற்கூடமுந்தாண்டி கானு
தேவடிவிட்டரண்மனைச்சாவடியுந்தாண்டி
கர்த்தாக்களமர்ந்திருக்குமேடை அந்தக்
கருங்கல்லுச்சவுக்கையிலொயிலாகச்சாய்ந்து
நரசிம்மநாய்க்கனையழைத்து நல்ல
நரசப்பன்குருவப்பனைவரவழைக்கச்சொல்லி
திறமிகுகான்சாய்புசீலன் அந்த
சீனிச்சிராவுத்தராசுவெள்ளைக்காரனையழைத்து
படைபடேசாய்பையுமழைத்து மல்லி
நாய்க்கன்கேசரியைவரவழைக்கச்சொல்லி
தடமதனன்முத்தழகுபிள்ளை நல்ல
சண்முகவேலாயுதமுதலியையுமழைத்து

தானப்பநாய்க்கனையழைத்து நல்ல
தளவாயல்முதலிதனைவரவழைக்கச்சொல்லி
வாய்த்ததொருமீனாட்சியையன் தனையும்
வகையாகச்சிக்கிரங்கூட்டிவரச்சொல்லி
பனிரண்டுதுரைமாரைப்பார்த்து காணும்
படைமதுரைச்சாவடியில்சாய்ந்திருந்துகொண்டு
(காலை) பனிரண்டுமணிவேளைக்கெல்லாம் அந்த
பாங்காவனதிருப்பூவணமேற்படைகள்பயணம்
காலைக்குமறவன்மேல்சாரி என்று
நம்முடையசேனைகளுக்குறுதிசொல்லுமென்றான்
(அந்த) வேளைதனில்மறவருடவரிசை அதுவும்
விருகவண்டியூர்செச்சையிலிறங்கி
தூதுவனைமுன்னாலேயனுப்ப அவனும்
துரிதமாயோடிவந்துமாசாவுக்குச்சொன்னான்
இதுசேதியாசாவுங்கேட்டு பர
மேல்பரிமீனாட்சியைமனதிலேநினைத்து
சந்தோஷமாகியேமாசா அவரும்
தயாராகிபாப்பாசுகாலுக்கணிந்து
மகனையுங்கக்கத்திலிடுக்கி மாசா
வருகிறாள்ராவணச்சாவடிகடந்து
சின்னக்கடையுங்கடந்து காணு
தேவடிவிட்டாண்மனைச்சாவடியுந்தாண்டி
சேர்ந்தகோபுரவாசல்தாண்டி இந்த
செகமகிழ்ந்திடும்வடக்குவாசலுந்தாண்டி
மடல்வாழைக்கனிசொரியுமதுரை அந்த
வையையாற்றுக்கரையில்வந்துநின்றுகொண்டு
உடுப்புவகைவரிசைகளையெல்லாம் மாசா
உத்தரஆற்றுவெளிகொண்டுவரச்சொன்னாள்
வருகுதேதமறவருடவரிசை அது
வந்திருக்கும்வேடிக்கைசொல்லமுடியாது
அதிசயத்தைக்கண்குளிரப்பார்த்து மாசா
அகமகிழ்ந்துமாணிக்கப்பெட்டியைத்திறந்து
மாசாவும்வரிசைகளையெடுத்து அப்போ
வகையுடனேகண்ணாலேயேயிட்டுப்பார்த்து
மாணிக்கப்பெட்டியைத்திறந்து அந்த
வச்சிரமணிகுல்லாவைமகன்தலையில்விரித்து

கானனுக்கனுப்பியமுத்தங்கி
கனமாகவொருதட்டில்தானெடுத்துவைத்து
தங்கத்தின்தொட்டிலையெடுத்து
தன்மகனைச்சற்றுநேரம்போட்டாட்டிப்பார்த்தாள்
தனக்குத்தந்தமுத்தாரவிக்கை
தான்பூட்டிக்கண்ணாலேதானழகுபார்த்தாள்
செப்பரிமூங்கிற்குழாய்திறந்து
சினத்துப்பட்டெடுத்தித்தானுடுத்திக்கொண்டு
இப்படியுடுப்புகள்வந்ததற்கு
என்னதான்சொல்லுவானோபாதகன்கானு
என்மனதுபோலேயடிமீனாள்
இருக்கவேணுங்கானனுடமனதென்றுசொல்லி
நன்மைதரவேணுமடிமீனாள்
நல்லவாக்குசொல்லவேணுமீனாட்சியென்று
நடந்துவந்தாளப்போதுமாசா
ராசாதிபதிமுன்னேவரும்வேளைதனிலே
கானகத்துப்புலிபோலச்சீறி
கண்சிவந்துபொறிபறக்கப்பார்த்தேதுசொல்வான்
ஏதடிபுதுச்சேரிபெண்ணே
இத்தனையுடுப்புகள்கொடுத்தவர்களாரு
கனகோபமாகவேகேட்டான்
கன்னியவள்மாசாவுமேதுசொல்வாளாம்
ஆண்டவனேதுரைகானுசாய்பே
அண்ணன்தாண்டவராயன்கொடுத்தனுப்பிவைத்தான்
மாசாவுமிதுசேதிசொல்ல
மதனதுரைகான்சாய்புமேதுசெய்யலுற்றான்
மகன்தலையிலிருந்தகுல்லாவை
வாங்கிவரச்சொல்லிரண்டுகல்லையுங்கழட்டி
உகந்தசராப்பையழைத்து
ஒருகல்லுவிலையென்னபெறுமென்றுகேட்டான்
அரண்மனைவிலையாகவிற்றால்
அறுநூறுபொன்னுக்குவாங்கலாங்கல்லை
இருகல்லுங்கூடிவிலையில்விற்றால்
எழுநூறுபொன்னுக்குவிற்கலாமென்றான்
இப்படிகல்விளையுந்தேசம்
இருக்குதோமறவருடபுவனத்திலவுண்டி

இப்படிகல்லுபெருத்தாக்கால் லவுண்டி
என்பேச்சையெள்ளளவுங்கேழ்ப்பானோஅவன்தான்
அடிக்கிறேன்மறவன்மேல்ச்சாரி நாளை
பிடிக்கிறேன்திருப்பூவனக்கோட்டைதனைபாதர்
முடிக்கிறேன்சம்பிரதாயம்லவுண்டி என்று
முழுநீல்கானுதுரைதழுவணையிற்சாய்ந்தான்
பொருப்புலவுந்துரைகானுசாய்பே உந்தன்
புகழ்பெற்றமனையாட்டிசொல்லுகிறேன்கேளு
திருப்பூவனம்வேணுமென்றுகேட்டால் நானும்
ஸ்ரீதனம்போல்வாங்கித்தருகிறேனென்றான்
இப்படிமாசாவுஞ்சொல்ல அப்போ
இயல்பாகக்கான்சாய்புயேதுசொல்வானும்
பெண்சாதிமாணியந்தனிலே லவுண்டி
புகழ்பெற்றதுரைகானுஆள்வேனோதேசம்
நானைக்கேயொருபலித்தாதிர்த்து நானும்
வாங்குவென்திருப்புவனக்கோட்டைநான்சிங்கம்
மண்டியேயொருபலித்தாதீர்த்து நாளை
வாங்குவேன்மறவருடபாத்திபனாவென்றான்
மாலானகானுதுரைசொல்ல நல்ல
மங்கையர்சிகாமணிசாவுக்கப்போ
கோபங்கள்சொல்லமுடியாது மாசா
குவளைவிழிசிவப்பேரிச்சபைதனிலேநின்று
இராவணனாய்நீவந்துபிறந்தாய் அதற்கு
இராமசாமியாகப்பிறந்திட்டான்மறவன்
சூரனாய்நீவந்துபிறந்தாய் சிவ
சுப்பிரமணியாகப்பிறந்திட்டான்மறவன்
கோரமிகுகஞ்சனாய்ப்பிறந்தாய் அவனைக்
கொன்றதோர்கிருஷ்ணனாய்ப்பிறந்திட்டான்மறவன்
துரியோதனனாகப்பிறந்தான் குரு
தேசிகன்தர்மனைப்போல்பிறந்திட்டான்மறவன்
அரியகீசகன்போலப்பிறந்தாய் அதற்கு
அதிவீரன்வீமனைப்போல்பிறந்திட்டான்மறவன்
திறல்விஜயன்போல்மறவன்பிறந்தான் அதற்குத்
தேத்தாசன்போல்பிறந்தாய்திசைமதுரைக்காக்க
ஆரோடேபகைத்தாலுமுனக்கு துரையே
அவர்களாலொருநாளுந்தாழ்வுவராது

மறவருடன்பகைத்தகாலத்தில் இந்த
மதுராபுரிமண்ணுனக்குத்தக்காதுசொன்னேன்
மறவனென்றால்பெரியவீட்டுக்காரன் மறவன்
மந்திரிவெள்ளாழன்வெகுதந்திரக்காரன்
வெள்ளியாய்முளைத்தாலுமுளைப்பான் அவனும்
வேந்தனாய்முளைத்தாலுமுளைப்பான்வேளாளன்
வெள்ளியெதிராகப்போனாலும் அந்த
வெள்ளாழனோடுமட்டுமெதிர்க்காதேவேண்டாம்
காராளனுக்கருமைதெரியாது நமது
கருவையறுத்திடுவான்தாண்டவராயன்
மாசாவுமிப்படிசொல்ல கானு
மன்னவனுங்கண்சிவந்தேதுசொல்வானும்
அடுப்பூதத்தெரியுமடிலவுண்டி உனக்கு
ஆஸ்தானசங்கதிகள்தெரியுமோபெண்ணே
சோறுக்கத்தெரியுமடிபெண்ணே உனக்கு
துரைகளுடசம்பிரதாபம்தெரியுமோலவுண்டி
கஞ்சுகாச்சத்தெரியுமடிபெண்ணே உனக்குக்
காவலர்கள்கெடித்தலங்கள்தெரியுமோலவுண்டி
மிஞ்சிப்பேசவேதுலவுண்டி இத்தனை
வீரியங்களேதடிபுதுச்சேரிப்பெண்ணே
உருவியேதங்கபாலாவை கோபித்து
உரைவிட்டுமாசாமேலெரிந்திட்டானப்போ
இருபதுபொன்சகலாத்துமருந்து நல்ல
இளந்துடையில்மாசாவுக்குக்காயங்களாச்சு
மூசுறேடேபேசமுடியாது என்று
முகந்திருப்பிமாசாவும்வெளியிலேவந்து
அசுமானகிரிதனிலேநின்று மனதி
லன்பாகமாசாவும்யோசனைகள்செய்து
துரோகியினன்மையெல்லாமறிந்தோம் மதுரை
தேவியினன்மையினியறியவேணுமென்று
வராகிசெகசோதிகௌமாரி மதுரை
மகமாயிசன்னிதிக்குவந்தனைகள்செய்து
எண்ணூறுபொன்னெடுத்துக்கொடுத்து மதுரை
ஈஸ்பரிமீனாட்சிக்குச்சிறப்புசெய்யச்சொல்லி
முன்னூறுகுடந்தண்ணீர்கொண்டு வந்து
முழுகியேமாசாவும்பட்டுடையுடுத்தி

மந்தாரைமுல்லையிருவாட்சி நல்ல
மகிழம்பூசெவ்வலரிமாலைகளணிந்து
கந்தாதருடமல்லிதரித்து நல்ல
களினமிருபுனுருசவ்வாதுகளணிந்து
சருராகக்கோபுரங்கடந்து மீனுட்சி
சந்நிதியில்மங்கையர்கள்தான்சூழவந்து
திருமலைக்கர்த்தாக்கள்நாட்டில் ஆயி
தேவியாய்வந்தவளேபாண்டியன்மகளே
சாதியிலேநான்புலைச்சிதாயே உந்தன்
சந்நிதிக்கெதிராகவருகிறேனடியாள்
மாடுதின்னும்புலைச்சிநாண்வாரேன் என்று
மனதிலேயெள்ளளவுங்கவலைவைக்கவேண்டாம்
கொஞ்சமாய்மனதிலேநினைத்து ஆயி
கோபித்துக்கொள்ளாதபாண்டியன்மகளே
வஞ்சகமனதில்நினையாதே பெற்ற
மாதாவுநீயுந்தான்மதலைநானடியாள்
துரைகானுபங்கிலேநீயிருந்தால் எனக்கு
துடியாகவலதுபுரஞ்சொல்லவேணுந்தாயே
இரவிகுலமறவர்பங்கிலிருந்தால் எனக்கு
இடதுபுரஞ்சொல்லென்றுகேட்டாளேமாசா
தென்புறத்தில்சொல்லாதபடிக்கு மீனுள்
திருவிருப்பில்இடதுபக்கங்கெவுளியதுசொல்ல
என்மனதுபோலயடிமீனுள் தாயே
இருந்துதேஉன்மனதுபாண்டியன்மகளே
என்றுசொல்லித்திரும்பியேமாசா தனது
எழிலானமாளிகையினுள்வந்துசேர்ந்து
விரும்பிலவருமர்க்காரமுத்தை அழைத்து
மிக்கதளகர்த்தனுக்குவிரைந்தெழுதலுற்றுள்
ஆடுமாடுபதனமடா அண்ணே உனது
ஆண்டவன்துரைமகன்பத்திரஞ்சொன்னேன்
மாடுதின்னும்புலைச்சிநானண்ணே என்னை
மார்க்கமாயுறவென்றுநம்பினையே அண்ணே
சொல்லாதசேதியெல்லாஞ்சொன்னேன் அந்த
துரைமூளிகானனுக்குவிசுவாசமில்லை
பொல்லாதமுழுமூடன்கானன் நானும்
புத்திசொன்னால்சேழ்ப்பானோகேழ்க்கவேமாட்டான்

காணனைசெயித்திட்டாலண்ணே உனக்கு
கலக்கங்கனொன்றுமில்லைமுல்லைமணியார்பா

குறிப்பாகவெள்ளம்வருமுன்னே அணை
கோலிக்கொள்வடக்குசென்றுநபாபிடத்திற்சொல்லு

ஏனைநம்பிநீயிருக்கவேண்டாம் உனக்
கென்றபடியார்முல்லைதாண்டவராயா

மனதுரம்மியமாகவெழுதி படித்து
மாரியர்க்கார்கையில்கொடுத்தனுப்பிவைத்தான்

மாரியெனும்மர்க்காரும்வாங்கிக் கொண்டு
மணலூருதாண்டியேதிருப்பூவனஞ்சேர்ந்து

மண்டலீகன்கொனூவுக்குமுன்னே வைத்து
வகையாகச்சேதிசொல்லிக்கும்பிட்டுநின்றான்

மாசாவின்காயிதத்தைப்பார்த்து அந்த
மந்திரிதாண்டவராயன்சந்தோஷப்பட்டு

மருமகனேகைலாசம்பிள்ளை தங்கை
மாசாவின்காயிதத்தைவாசியென்றுசொன்னான்

மருமகனுங்காயிதத்தைவாங்கி அப்போ
வாசிக்கத்தளகர்த்தன்காதாரக்கேட்டு

சிங்கமேயர்க்காரமாரி ஒரு
சேதிநான்வேளாளன்சொல்லுகிறேன்கேளும்

தங்கச்சியென்றல்லோயிருந்தேன் எனக்குச்
சத்ராதியானளேதிசைமதுரைமாசா

மைத்துனனென்றல்லோயிருந்தேன் எனக்கு
மாத்தானய்வந்தானேமதுரைதிசைகாவன்

துற்சனனுரவுபகையாச்சே என்று
சொல்லுபோமாசவுக்குள்ளபடிமாரி

இனிமேலுந்திருப்பூவனமிருந்தால் நம்மை
இருக்கொட்டான்வடக்கேதானடக்கவேணுமென்று

தனிவீரதாண்டவராயன் அந்த
க்ஷணத்திலேபயணமென்றுதன்சேனைக்குரைத்து

மாப்பிள்ளைசுப்ரமண்யதேவா ஒரு
வார்த்தைநான்வேளாளன்சொல்லுவேன்கேளு

தப்பாமல்திருப்பூவனந்தனிலே நீங்கள்
தயாராயிருக்கவேணுங்கானுதுரைவருவான்

ஆர்க்காடுநான்போறேன்தம்பி ஆறு
மாசமோஆறுவருஷமோதெரியாது

மார்க்கமாய்நான்வருமட்டும் நமது
மறவர்திருப்பூவனம்பத்திரமென்று
உறுதிகளும்வெகுவாகச்சொல்லி அந்த
உத்தமனுங்குதிரைமேல்சீனிவைத்தேறி
நடந்திட்டான்தாண்டவராயன் அந்த
நாழியிற்சிவகங்கைப்பேட்டைவந்துசேர்ந்து
தடம்பரவும்பொன்மலர்செய்து நல்ல
தங்கமலர்வெள்ளிமலர்தன்கையிலெடுத்து
விருதுரணபேரிகைமுழங்க குதிரை
மேலிட்டநகபத்துடங்காமுழங்க
இருபுறமும்வெண்கவரிவீச நல்ல
எறியீட்டிவெடிக்காரர்முன்னேநடக்க
கத்திகேடையக்காரர்சூழ குதிரை
காரர்படைவிருடனேகடல்போல்நடக்க
வெற்றிவெண்சாமரைகள்வீச முல்லை
வேளாளன்புறப்பட்டான்சொல்லமுடியாது
மிக்காஞ்சிரங்காலுங்கழித்து நல்ல
வீரூணநால்கோட்டைசோழபுரந்தாண்டி
ஒக்கூறுமைதானந்தாண்டி நல்ல
உத்தாருந்தகுபட்டிஒப்பமுந்தாண்டி
அரளிக்கோட்டையாசாரந்தாண்டி அந்த
ஆஸ்தானந்திருக்கோட்டியூர்மைதானந்தாண்டி
திறல்விஜயன்தாண்டவராயன் அப்போ
சீக்கிரம்வயிரவன்பட்டிப்போய்ச்சேர்ந்து
சலுகைப்பெரியுடையானின்ற நல்ல
சுவர்ணகாமிமகன்முத்துவடுகையன்
சந்திப்புகொடுக்கவேணுமென்று துரைக்குத்
தயாராகப்பூப்பந்தல்போட்டிடச்சொல்லி
மஞ்சுதவழ்கனிவாழைநாட்டில் நல்ல
மகரதோரணங்கட்டிமாங்கனிகள்தூக்கி
அஞ்சடுக்குபஞ்சுமெத்தைவிரித்து அதிலே
ஐங்கலமல்லிகைப்பூகாம்பரிந்துகொட்டி
பச்சைதிண்டுதலையணைகள்வைத்து அதிலே
பாங்கானதிண்டொன்றுகொண்டுவந்துசாத்தி
இச்சைபெறசல்லாவைவிரித்து நல்ல
இதவாகமலர்ப்பாப்பன்னீர்தெளித்து

வண்மையுடன்சோடித்துவைத்து ஜக
மண்டலேஸ்வரன் துருவன்முத்துவடுகையன்
கண்வளர்விபூதிதனைப்பூசி நல்ல
கஸ்தூரிபொட்டுஞ்சவ்வாதுந்தரித்து
ஒருபிடி பூணூல்துலங்க நல்ல
உத்திராட்சப்பொன்குவளையூஞ்சலிட்டாட
பவழமுத்துத்தாழ்வடந்துலங்க நல்ல
வயிரவயிடூரியக்கல்மாலைதுலங்க
முருகுவச்சிரகண்டிதுலங்கக் காதில்
மோடியுடன்மாதக்கல்கடுக்கனுமிலங்க
இருகையிலுந்தங்கவளையிலங்க சிரசில
ஈரைந்துமுத்துகொண்டைப்பாகையுந்துலங்க
பூவாலேபூப்பந்தல்போட்டு நல்ல
பூலோகதேவேந்திரன்வெளியில்வருகையிலே
வடக்குவடகிடுகிடென்றதிர நல்ல
வாங்காவலம்புரிச்சங்குநின்றூத
இடிபோலபேரிகைமுழங்க நல்ல
இசையானசங்கீதமேளந்துலங்க
திடமுடையநகுலாபராக்கு உலகில்
தேவதேவேந்திராதீராபராக்கு
வடகரைப்புலிபெரியவுடையார் தேவர்
வங்கிஷம்விளங்கவருமாலேபராக்கு
இப்படிகட்டியங்கூற பூலோக
இந்திரனராதிபதிகொலுவந்துசேர்ந்தார்
கெற்புலிமுத்துவடுகையர் பாதர்
கிரீடிகொலுசேர்ந்தவுடன்தாண்டவராயன்
திருப்பாலகரைதனக்குவந்து வெள்ளி
செம்புதனில்சுத்தசலமதைமொண்டு
திருப்பாகரையதுகடந்து துரை
தேவேந்திரன்கொலுவில்சென்றுதளகர்த்தன்
ஒருபிடிவராகனொருதட்டில் சொட்டி
உத்தமன்தளகாத்தனிருகையாலேந்தி
துருவனிகரெனத்திஷ்டிசுத்தி அதைச்
சுழற்றியெரிந்துமுல்லைதாண்டவராயன்
வேதமொருபறையோர்கள் துரையை
வேளாளன்மூன்றுதரஞ்சுற்றிவந்துநின்று

பாதமதில்பன்னீர்சொரிந்து பின்
பட்டினாலீரமதுதானேதுடைத்து
தங்கமலர்வெள்ளிமலரெடுத்து துரை
சாமியுடபாதத்தில்தானுஞ்சொரிந்து
செங்கைகுவித்தேமுல்லைமார்பன் நல்ல
ஜெயமண்டலேஸ்வரன்திருவடிதனிலே
முடிசாய்த்துத்தாண்டவராயன் துரை
முத்துவடுகையாதுபாதத்தில்வீழ்ந்தான்
இடரென்றுயிருகையால்தாங்கி துரை
சீர்பெறவாசீர்வதித்தெழுந்திரென்றுசொல்லி
மோதிரக்கையினாலேதாங்கி அண்ணே
முடிமன்னாகாராளாசொல்லுகிறேன்கேளு
வயதுக்குமூத்தவனீயண்ணே என்னே
வணக்கமாய்க்கும்பிடுதல்ஞாயமல்லசொன்னேன்
ஆசிக்கநிலைநிறுத்திவைத்தாய் அண்ணே
ஆஸ்தானம்நிலைநிறுத்திவைத்தவன்நீதான்
என்னசங்கதிகொண்டுவந்தாய் அண்ணே
எந்தனுக்குச்சொல்லென்றுகேட்டாரேதுரையும்
ஆண்டவனேமுத்துவடுகையா உனது
அடிமைநான்காராளன்சொல்லுகிறேன்கேளு
உனைக்காணவந்தவகைசாமி அடியேன்
உள்ளபடிவேளாளன்சொல்லுகிறேன்கேளு
திருச்சிராப்பள்ளிகோட்டைதனிலே யிருந்து
திசைமதுரைக்கோட்டைக்குவந்தானேகானன்
நெல்லூர்சிராப்பளியிலிருந்து கானன்
நேர்தெற்கேவடமதுரைக்கோட்டைவருகையிலே
வரும்போதுகும்தானென்றுவந்தான் அந்த
மதுரைக்குவந்தபின்புகானுதுரையானான்
(அவனை) மைத்துனனென்றுவுறவாடி அவன்
மாசாபுலைச்சியைத்தங்கையென்றெண்ணி
உடுப்பிகள்வெகுவாகக்கொடுத்தேன் அந்த
உலோபியாங்கானனுக்குவிசுவாசமில்லை
கட்டாதவுப்பைகட்டியனுப்ப துரையே
கானனுக்கெவ்வளவுவிசுவாசமில்லை
திருப்பூவனங்கேட்கிறான்சாமி நம்முட
செல்வமுள்ளபாத்திபனூர்கேழ்க்கிறான்சாமி

திருப்பூவனம்விட்டுவிட்டிடுவேன் நாலை
சிவகங்கைகுடியிருப்புகிலைக்கொட்டன்காணன்
இப்படிதாண்டவராயன்சொல்ல நல்ல
இயல்பாகமுத்துவடுகையருஞ்சொல்வார்
வேணுமென்றுகாணுதுரைசேட்டால் அண்ணே
வீணிலேசெனியத்தையிழுக்காதேவேண்டாம்
நாலுகோட்டைசோழபுரம்போலும் அந்த
நலங்கொண்டபாத்திபனூர்விட்டுவிடுமென்றார்
மேலுமவனுடனேபகையாதே சண்டை
மேற்கொண்டுமவனுடனேயெதிர்க்கமுடியாது
எந்தெந்தசிமைகேட்டாலும் அவனுக்
கில்லையென்றுமாத்திரஞ்சொல்லாதேவேண்டாம்
மாபோஜன்மதுரையுடன்சேர்க்கை திருப்பூ
வனக்கோட்டைவிட்டுவிடுமதிமந்த்ரியென்றார்
இப்படிதுரைமகனுஞ்சொல்ல நல்ல
இயல்பாகவேளாளனேதுசொல்வானும்
போபோபேய்கொண்டதுரையே உமது
புத்தியுமிம்மட்டோமுத்துவடுகையா
சுண்டவிரலிடங்கொடுப்பேனோ பாதா
துரைவாசல்மதிமந்த்ரியதிகாரியடியேன்
கண்டறியுமுனதடிமைசேதி என்று
காராளன்சொன்னமொழிகாதாரக்கேட்டு
இப்படிதயிரியங்கள்சொன்னாய் அண்ணே
எப்படியவனைநீசெயங்கொள்வையென்றார்
அப்போதுமுல்லைமணிமார்பன் சிங்கம்
ஆண்டவன்முகம்நோக்கியேதுசொல்வானும்
ஆர்க்காடுநாலுமிப்போநடந்து நல்ல
அனைவர்புகழ்நபாபுதனைகண்டுசந்தித்து
த்க்காகவேபடைதிரட்டி அந்த
சற்சனன்துரைபெரியபிரட்டனையுங்கூட்டி
மேவலர்கிரீடிமுசலாவி கானன்
பேஜர்துரைமுசியராசறங்கிசையுமழைத்து
ஆவணிமாததிற்குள்ளாக அவனை
யனைவோருமறியவேதூக்காமல்விட்டால்
என்பேருதாண்டவனல்ல சிங்கம்
எடுத்ததுவுந்தளகர்த்தமோதிரமுமலல
பிடித்ததுவுமெழுத்தாணியல்ல பாதர்
போட்டதுவுந்திவாசுகம்பளியுமல்ல
நன்னகர்சிறந்தபுவிபோற்றும் நல்ல
நாலுகோட்டைதளகர்த்தனனல்லவென்றான்

ஏற்கவேவிரியஞ்சொன்னாய் அண்ணே
இதற்குநான்மறுவபணஞ்சொல்லுகிறேன்கேளு

ஆர்க்காடுபோமிறதாஅண்ணே எனக்கு
அன்பாகத்தோற்றவில்லைதாண்டவராயா

துலுக்கனைநம்பலாமோஅண்ணே அந்த
துரோகிபறங்கிகளைநம்பவுங்கூடாது

மெலுக்கா இதுவரைக்குமிருந்தோம் சும்மா
விருதாவிலேவடக்கேபோகிறாயண்ணே

கொள்ளுத்தான்பெருத்திருக்குந்தேசம் அதிலே
குடிகேடுமெத்தவுண்டுதிருச்சினாப்பளியில்

ஏழைவருஷத்துப்பகுதி நாமும்
எள்ளளவும்வடக்குமுகங்கொடுத்தனுப்பவில்லை

போனநாழியிலேநபாபு உன்னைப்
பிடித்தல்லோபாராவில்போடுவானென்றார்

மானுபாவாமுத்துவடுகையர் உனது
மதியந்திரிசம்பிரதாயஞ்சொல்லுகிறேன்கேளு

காலாலேமுடிவதொருமுடித்து அதனைக்
கையினாலவிழ்த்தாக்காலவன்தானபாபு

பாலானமம்மூதலிசாய்பை பொன்
மலைவெளியிலிழுத்துவந்துபேட்டியுஞ்செய்து

அவனிடத்தில்வெகுமதியும்வாங்கி சாமி
அவன்செவியைநான்பிடித்தாட்டுவேனென்றான்

கவனமுடன்முல்லைமணிமார்பா வடக்கே
கனமுடனேபோய்வரயோசிக்கிறாயண்ணே

ஆர்க்காடுபோனவர்களண்ணே கொழுத்த
யானைவாயிர்கொடுத்தகரும்பல்லோமந்திரி

போர்க்குரியதிரிச்சிறைப்பள்ளிக்கு அங்கே
போனவர்கள்திரும்பிவரக்காணேனென்மந்திரி

மண்ணைதாளுண்டவர்தளண்ணே இந்த
மண்ணிலுங்கோடியடாமுல்லைமணிமார்பா

என்றைக்குநிட்சயமோஅண்ணே இப்போ
என்மனதுக்கவ்வளவுஞ்சம்மதிகளில்லை

எந்தெந்தத்தேசங்கேட்டாலும் அவனுக்
கில்லையென்றுமாத்திரஞ்சொல்லாதேவேண்டாம்

இந்தமொழிசொன்னீரேசாமி தேவர்
இப்படியோசெங்கோல்செலுத்தவோபோறீர்

ஒருகாசுசெலவழிக்காமல் சாமி
உனதடிமைத்திசைமதுரைதடியாமற்போனால்

தருமகுணமுத்துவடுகையா உமக்குத்
தலைமையாம்பிரதானியாவனேயென்றார்
என்வார்த்தைகேளாமற்போரு யுன்னை
என்றைக்குக்காண்பேனோமுல்லைமணிமார்பா
சாமியுடதிருநாமந்தன்னை அடியேன்
தலையின்மேல்வைத்துக்கொண்டார்க்காடுசென்று
திசைகட்டுஒருகட்டாய்கட்டி நாளைத்
திருபூவனத்திசையாசப்பாளையத்தைகூட்டி
மறவருடதளகர்த்தனென்று இந்த
வையகமுழுதுமெனைச்சொல்லவேணுமென்றான்
ஆர்க்காடுபோகிறபோது நல்ல
டீக்காகப்போவென்றார்முத்துவடுகையர்
சிங்கமேகவுரிவல்லையா ஒரு
சேதிநான்வேளாளன்சொல்லுகிறேன்கேளு
உரியரிசிபஞ்சகாலத்தில் கெவுரி
ஒருகோடிஜனத்தையும்ரட்சித்ததாதா
ஒற்றைக்குதிரையேறாதே சாமி
உள்சுற்றுக்காற்றுவழிமிஞ்சுநடவாதே
நான்போய்வருமட்டும்துணையே நம்மிட
நாயகன்காளையார்கோயிலிலிருக்க
இவிடத்திலின்னமிருந்தாக்கால் நாளை
மோசங்கள்வந்துவிடுமுத்துவடுகையா
சொல்லிவாய்மூடுவதற்குள்ளே அப்போ
துரைமகனுமண்ணன்முகமேறிட்டுப்பார்த்து
அண்ணேவாதாண்டவராயா இப்போ
அன்பாகவொருவயண்ஞ்சொல்லுகிறேன்கேளு
இவிடம்விட்டுஆர்க்காடுபோனால் உன்னை
என்றைககுக்காண்பேனோதாண்டவராயா
பொன்மிகுத்ததிருச்சிணப்பளிக்கு நீயும்
போகிறையேஉன்னழகுபார்க்கவேணுமென்று
ஆண்டவன்முத்துவடுகையர் அந்த
நாழியில்காளாஞ்சிகருப்பனையழைத்து
ராயப்பன்சேருவையழைத்து அப்போ
நலங்கொண்டயானைதனைக்கொண்டுவரச்சொல்லி
நேயமுடன்சித்திரங்களெழுதி அதிலே
நோகப்பூச்சக்கிரஅவுதாவும்வைத்து
முத்துநாய்க்கனையுமழைத்து நல்ல
முடிமன்னன்பொக்கிஷவீட்டைதிறந்து

உக்கிராணவிட்டைத்திறந்து ஒரு
பெட்டியைத்திடீரென்றெடுத்துரைச்சொல்லி
வச்சிரமணிபெட்டியைத்திறந்து அப்போ
வரிசைகள்வெளிதனிலேதிடீலென்றெடுத்துப்
பத்துப்பொன்போருவையெடுத்து நல்ல
பச்சைக்கடுக்கனொருபாகையுங்கொடுத்து
தங்கவளைமுன்கைமுதாரி பசுந்
தங்கமோகனமாலைசரப்பளிகொடுத்து
துங்கமிகத்தகட்டுநிலையங்கி நல்ல
துதிபெறுவெள்ளாழனுக்குவெகுமதிகள்செய்து
அழகுநான்பார்க்கவேணுமண்ணே சற்றே
ஆனைமேல்நீயேறிவாவென்றுசொன்னார்
தளகர்த்தன்வெகுமதிகள்வாங்கி வெகு
தளத்துடனேயானைதனைமூன்றுதரஞ்சுற்றி
நேராய்ச்சலாம்வாங்கிநின்று அப்போ
நேரில்நிற்குமுத்துவடுகையனைப்பார்த்து
மெத்தவெகுதுடினஞ்செய்யாதே நம்மிட
மேனாட்டுகள்ளருடனெதிர்த்துப்பகையாதே
பேட்டிநான்செய்துவருமட்டும் நல்ல
பேறுனசின்னையாநல்லண்ணைதேவா
தெற்குதென்பாரிசந்தனிலே நல்ல
இடமாகயானைகட்டுங்கல்லுக்குமேற்கே
காருநிகர்பேல்வீடுதன்னில் முத்துச்
சுவர்ணகாமிமகன்கொலுவினிலிருந்தார்
வலுவீரகெம்பீராபராக்கு என்று
மதிமந்த்திரியனைமேலிருந்துகும்பிட்டான்
ஆண்டவனேமுத்துவடுகையா என்று
அரசர்புகழ்காரானென்கும்பிடும்போது
சலுகைப்பெரியுடையானின்ற ராஜ
சுவர்ணகாமிமகன்முத்துவடுகையன்
உத்தரவுமுல்லைமணிமார்பா இப்போ
உனதழகுகண்ணாலேபார்த்தனடாஅண்ணே
செத்தாலுமோட்சமுண்டுஅண்ணே என்று
திருஷ்டிசுற்றிப்போய்வாருமென்றுசொன்னாரப்போ
நீரனும்போய்வாவென்றுரைக்க அப்போ
திருப்பினான்யானைதனைத்தாண்டவராயன்
கட்டியர்பராக்கென்றுகூற நல்ல
கண்வளரும்வயிரவன்பட்டியுந்தாண்டி

திருப்பத்தூர்சீமைதாண்டி — வளர்
 சிராவயலுடன்மருதங்கூடிகடந்து
சிராவயல்ஒப்பமுந்தாண்டி — தனது
 திருவளருங்குண்ணக்குடிவந்தங்கேசேர்ந்து
ஐம்பதுபொன்னெடுத்துக்கொடுத்து — நல்ல
 ஆண்டவன்குமாரகுருக்குச்சிறப்புசெய்யச்சொல்லி
மந்தாரைமுல்லையிருவாட்சி — நல்ல
 மகிழம்பூகுடமல்லிசாத்தென்றுசொல்லி
வெள்ளிமலர்பொன்மலருஞ்சாற்றி — நல்ல
 விதமானவில்வமலர்ச்சனையுஞ்செய்து
தாண்டவராயதளமந்திரி — நல்ல
 தயிரியமாய்கும்பிட்டுஏதுசொல்வானும்
வடக்கேதான்போய்வரலாமென்றால் — சுவாமி
 வலதுபுறங்கெவுளியதுசொல்லவேணும்சுவாமி
வடக்கேநான்போகலாகாதென்றால் — சுவாமி
 வலதுபுறஞ்சொல்லவேணுமென்றான்வேளாளன்
கேட்டுவாய்மூடுவதற்குள்ளே — நல்ல
 கெம்பீரமாய்த்தெட்சணமூர்த்தாவுமாச்சு
சுவாமியினுத்தாவுதன்னை — நல்ல
 தளமந்திரிதாண்டவன்முந்தானையில்முடிந்து
சந்தோஷமாய்வெளியில்வந்து — நல்ல
 தாண்டவராயதடமந்திரிமகிழ்ந்து
வையாபுரிகரைதனிலேறி — மண்ட
 லாதிபதித்வாசுக்கபளியிலிருந்து
தம்பிதாமோதரப்பிள்ளை — இப்போ
 தயிரியமாயொருசேதிசொல்லுகிறேன்கேளு
வம்பனுஞ்சின்னபறவமேறாலே — உனக்கு
 வருதென்றுசந்தோஷங்கொள்ளாதேஅண்ணே
வானஞ்சிறந்துவரம்பழிந்துபோனால் — அந்த
 வாய்க்காலும்நிற்குமோஅல்லிகுளமன்று
என்சீமையழிந்துபோகையிலே — நிலைத்து
 இருக்குமோவுன்சீமைராமநாதபுரந்தான்
சிவகங்கைபேட்டைபோகையிலே — நிலைத்து
 நிற்குமோஉன்னுடையராமநாதகோட்டை
மலைகோட்டைதுருவமதிலிருந்து — நாமது
 மதுராபுரிக்கோட்டைக்குவந்தானேகானன்
மதுரைவளர்கான்சாய்புதுரையே — நானும்
 மைத்துனனென்றுசொல்லியொப்பாரிபிடித்து

மாசாவைத்தங்கையென்றுசொல்லு — இப்படி
மரியாதையாம்நானும்யோசித்திருந்தேன்
என்னவுபசாரஞ்செய்தாலும் — அவனுக்
கெள்ளளவும்மனதிலேவிசுவாசமில்லை
நிலையான திருப்பூவனமும் — என்னுடைய
நேரானபாத்திபனூர்கேழ்க்கிறன்கானன்
உன்னுடைய திருச்சிறைப்பள்ளி — சீமை
யொருமிக்கக்கேழ்க்கிறன்கான்சாய்புலேன்
ஆற்காட்டுநபாபையழைத்துவந்து — அவனை
அடிக்கவேணுந்திசைமதுரைபுடிக்கவேணுந்தம்பி
அஞ்சலிலேயாற்காடுசென்று — நபாபை
அழைத்துவந்துமதுரைநகர்பிடிக்கவேணுந்தம்பி
இவ்வேளைசண்டைநாழிக்கு — தம்பி
எழும்பிநீருண்ணக்கூடவராமலேபோனால்
நபாபைநானழைத்துவரும்போது — எல்லோரும்
நகைக்கவேயுன்சீமைமுதற்கொள்ளையடிப்பேன்
என்றுசொல்லிகாயிதத்தையெழுதி — அப்போ
இருபேர்க்கார்கையில்கொடுத்தனுப்பிவைத்தான்
மண்டலம்புகழ்நகரந்தாண்டி — கல்வி
மருவுபுகலூருவாடிசெங்கமடைதாண்டி
ஆனந்தாதனூர்தாண்டி — நல்ல
அழகானவடக்கூர்பஜனூர்தாண்டி
சிரானஆண்டான்குடிதாண்டி — நன்மை
சிறந்தோங்குங்கமலனூர்தலையுங்கடந்து
ராமநாதபுரக்கோட்டைதனிலே — நல்ல
நராதிபன்தாமோதரம்பிள்ளையரண்மனையில்
சவுக்கையிலேதாமோதரம்பிள்ளை — அப்போ
தயவாகதிண்டுமேல்சாய்ந்திருக்கும்போது
காயிதத்தைக்கொண்டுவந்தர்க்காரன் — நல்ல
கனகமுடிதாமோதரம்பிள்ளைமுன்புவைத்தான்
வாசித்துகண்ணாலேபார்த்து — நிலை
வக்கணையெல்லாமறிந்துமனமுருகிக்கொண்டு
யோசித்துபின்னுமவனெழுந்து — தளவான்
ஒருநொடியில்தாய்பாதத்தில்விழுந்துகும்பிட்டு
ஆத்தாளேதாயேமாதாவே — இதற்கு
ஆலோசனைமறுவயணஞ்சொல்லென்றுகேட்டான்
பூத்தமலர்திரிலோகமாதா — தனது
புனிதகுணபிள்ளையையேதிட்டுப்பார்த்து

நானென்னசொல்வனடா தம்பி நமது
ராமனாதனிடஞ்சென்றுகேளுபோவென்றான்
போவென்றுசொன்னவுடன்தளவன் நல்ல
புகழ்பெற்றஆசாரவாசலதுதாண்டி
சீரானபிள்ளைமடந்தாண்டி நல்ல
சிறப்பாகமண்டபந்தோணித்துறைவந்து
இராமுழுதுந்நித்திரைசெய்து நல்ல
நற்பாலன்விடிந்தபின்தோணிமேலேறி
சிங்கமெனுந்தாமோதரம்பிள்ளை அந்த
க்ஷணந்திலேராமேஸ்வரந்தனக்குவந்து
ராமலிங்கத்தைபூசைசெய்து ராம
னையகர்பாதமதில்விழுந்துதெண்டனிட்டு
வடக்கேநான்போகவேணுமென்று ஒரு
மனதாகவிருக்கிறேனுன்னுடையதொண்டன்
திடத்துடன்வடக்கேபோவென்றால் எனக்குத்
தெட்சணஞ்சொல்லவேணுஞ்சீரானகெவுளி
வடக்கேநான்போகவேணுமென்றால் எனக்கு
இடதுபுறந்தெட்சணஞ்சொல்லவேணுமென்றான்
செயமாகும்வடக்கேபோவென்று ராமர்
திருவுருப்பில்தெட்சணங்கெவுளியதுசொல்ல
இயல்ராமருந்தாஞ்சொல்ல டில்லி
எமசேதுபுரம்வரைக்கும்வெல்லுவேனென்று
மாப்பிள்ளைதேவனுக்குமோலை முன்னே
வைத்தகால்பின்வாங்காமறமனுக்குமோலை
குண்டையூர்மறவருக்குமோலை சர்க்கரைக்
கோட்டைநாகலநாட்டார்க்குமோலை
கண்டெழுதிநான்வடக்கேபோறேன் போய்
காரியம்நபாபிடத்தில்பேசிவருமட்டும்
என்சீமைதனிற்களவுபோனால் நெருப்பா
யெரித்திடுவனுங்களையென்றெழுதியனுப்பி
பஞ்சவர்ணடால்விருதிலங்க நல்ல
பரிகுலதாமோதரம்பிள்ளைவெளிவந்து
கொம்புபேரிகைபூரிமுழங்க சிங்கம்
கொடுமரக்கொடிகருடக்கொடியூஞ்சலாட
தம்பூருபுள்ளாங்குழல்முழங்க விர
தவண்டைமுதல்மல்லாரிதாரிகைமுழங்க
இருபதுசோடுகணதப்பும் நல்ல
வழொட்டைமீதிலேபேரிகைமுழங்க

அருகில்மயிர்ரீட்டியொருகோடி நல்ல
அழகானவேலீட்டிகாரரொருகோடி
கத்திகேடையக்காரர்சூழ குதிரைக்
காரர்படையிருநூறுமுன்னே நடக்க
வெற்றிவளைதடிக்காரர்புடைசூழ நல்ல
வெடிக்காரரெறியம்புக்காரர்புடைசூழ
வெண்சவரியாலவட்டம்வீச கட்டியர்
மேலெச்சரிக்கைபராக்கென்றுகூற
சிங்கமுகத்தன்கையிலேறி பாதர்
செப்சிங்கம்தாமோதரம்வடக்குமுகம்நோக்கி
உருவாடிசெங்கல்மடைதாண்டி அப்போ
உயர்ந்ததோரணுமந்தக்குடியுங்கடந்து
பெருநாட்டுக்கல்வியுந்தாண்டி அப்போ
போனதாமோதரன்கூடாரமடித்தான்
கூடாரமடித்ததோர்சேதி நல்ல
கெம்பீரமாய்நல்லதாண்டவனுங்கேட்டு
பெரியவீட்டுக்காரன்வாரான் என்று
பேசியேதாண்டவராயனுமெழுந்து
இருவர்சமஸ்தானமுமொன்று நாமும்
எதிர்கொண்டுகாணவேணுமென்றவனினைந்து
காரைக்குடிக்கோவிலுந்தாண்டி நல்ல
கழனிசேரமாரபதிக்கொடித்தலமுந்தாண்டி
கனமிங்குங்கலிப்புலிமைதானம் தன்னில்
காராளரிருபேருஞ்சரிபேட்டிசெய்து
தனதாகக்கூடாரந்தன்னில் திண்டு
தலைகாணிமேற்சார்ந்திருபிள்ளைமாரும்
மன்னவன்தாமோதரம்பிள்ளை செம்பொன்
மருவுதாண்டவராயபிள்ளைதனைப்பார்த்து
அண்ணேவா தாண்டவராயா என்னை
யழைத்ததொருகாரியஞ்சொல்லென்றுகேழ்க்க
தம்பிவா தாமோதரம்பிள்ளை இப்போ
தயிரியமாயொருசேதிசொல்லுகிறேன்கேளு
உனையழைத்தசேதிதனைதம்பி நானும்
உள்ளபடிசத்தியமாய்ச்சொல்லுகிறேன்கேளு
நெல்லூர்சிராப்பளியிலிருந்து முன்னே
நேர்தெற்குகான்சாய்புமதுரைக்குவந்தானே
வருங்கயிலேக்கும்தானென்றுவந்தான் அந்த
மதுரைக்குவந்தபின்துரையானவனும்
வினையானதிருமதுரைகாணன் மெத்த

மிரட்டியேநம்மையேய்த்துப்பகட்டுகிறான்தம்பி
அன்பாகவடக்கேபோய்பேசி அவனை
அடிக்கவேணுந்திசைமதுரைபிடிக்கவேணுமென்றான்
இப்படியாதாண்டவா அண்ணே நாம்
இருபேரும்நபாபெதிரில்போகக்கூடாது
புலித்தேவனிருக்கிறானண்ணே நாமும்
போனவுடனவன்கொன்றுசொல்வானண்ணே
ஏழரைவருஷத்துப்பகுதி நாம்
இருபேருமொருகாசுங்கொடுக்கவேயில்லை
தோப்பாரபணத்துக்குநம்மை அண்ணே
தொந்தரைசெய்தொற்றைச்சாலில்நிற்கவைப்பானண்ணே
ஆற்க்காடுபோகிறது அண்ணே நமக்
கழகல்லமுல்லைமணிதாண்டவராயா
இப்படிதாமோதரன்சொல்ல அதற்
கேதுசொல்வான்முல்லைமணித்தாண்டவராயன்
போபோபேய்கொண்டதம்பி உன்னுடைய
புத்தியுமிவ்வளவோதாமோதரம்பிள்ளை
காலாலேமுடிவதொருமுடிச்சி அதை
கையாலவிழ்த்தாலவன்றானபாபு
துடிவதன்நபாபும்புதுரைசாய்பை நமது
சொற்படியேகேழ்க்கவேசெய்வேனென்றான்
ஏனிந்தவாலோசனையண்ணே நபாபை
இழுத்துவந்தால்போல்லாதமோசம்வருமண்ணே
வழிப்பாதைதெரியாமலண்ணே அவனும்
வடக்கேயிருக்கிறான்மம்முதலிசாய்பு
மார்க்கமாய்வெகுபடைகளிருக்க நமது
மடக்குகத்திமுன்னூறுவரைக்குமேயிருக்க
பதினாயிரம்பட்டாயிருக்க கையில்
பதினைந்துபிரங்கிதயாராயிருக்க
குதிரையொருநூறுமேயிருக்க ஈட்டி
கோடானகோடியிருக்குதடா அண்ணே
இருபேர்தளத்தையுங்கூட்ட முப்பத்
தேழாயிரஞ்சனங்கள்கூடுமடா அண்ணே
திருணவலிகீழ்க்காடுவரைக்கும் நாமும்
திசைகம்பம்நாட்டியேதோரணங்கட்டிடலாம்
கான்சாய்புவந்தெதிர்த்தாக்கால் எனது
கைகத்சித்திரத்தைப்பாரடா அண்ணே
இப்படிதாமோதரன்சொல்ல நமது
இயல்பாதாண்டனவனுமேதுசொல்வானும்

வலிந்தவிப்புதான் தம்பி எனக்கு
    எவ்வளவு புத்தியில்லை தாமோதரம்பிள்ளை
(அவன்) கருமருந்தாக்கார னடா தம்பி அந்தக்
    கானனுடன் சண்டை செய்து செயிக்கமுடியாது
இருபேர்க்குஞ் சனச்சேதமாகும் நாமும்
    எதிர்நிற்கக்கூடாது துரைசானனோடே
நபாபையழைத்துவந்துவிட்டு நாமும்
    நலியாமலிருந்தழகு பார்க்கலாமென்றான்
பூபாலன் தாமோதரம்பிள்ளை அண்ணை
    புத்திக்குச்சரிப்போனபடியென்றுரைத்தான்
சுதணக்திலேபொன் கொளியாண்டி யப்பன்
    தன்னைத் தளகர்த்தனழைத்துவரச்சொல்லி
பாளையம்போய்வருமட்டும் இதற்குப்
    படிச்செலவிருவர்க்குந் தளப்பெருக்கதிகம்
வேளைக்காயிரம்பொன் செலவாகும் அதற்கு
    விபரமாய்நீயென்ன தருவையென்றுகேட்டான்
(சாடி) தருகிறேன் செல்லும்பணமெல்லாம் கானு
    சாயபைநீர் தூக்குமரமேற்றிவிடுமென்றான்
இருபேருஞ் சந்தோஷமாக வந்து
    இறங்கினார் குண்ணக்குடி வையாபுரிக்கரையில்
வையாபுரிக்கரை தனிலேயிறங்கி நாளை
    வடக்கேதான் பயணமென்றுறுதியாய்ச்சொல்லி
இருபேரும் யானையின்மேலேறி முப்பத்
    தேழாயிரஞ் சனமுமெண்ணிக்கை கொண்டு
மூன்றானைமேலே நகபத்து அப்போது
    முழங்குதேயேழாட்டைமேலே நகாரா
முப்பது சோடு கனகதப்பு பாதர்
    முடிமன்னன் காற்பது பேரிகைமுழங்க
திருக்கீழக்குடி தனிலேவந்து நல்ல
    சிவாலயத்தை மூன்றுதரம் வலமாகவந்து
அறுபது பொன்னெடுத்துக்கொடுத்து சுவாமிக்கு
    அர்ச்சனை செய்தபின் தெரிசனைகள் செய்து
மறவருடன் சிவலூருதாண்டி நல்ல
    மன்னவர்களிருபேருமை தானந்தாண்டி
பாம்பூருமைதான் வெளியில் அப்போ
    பாளையமுமிறங்கியங்கிருந்தமாத்திரத்தில்
தொண்டமான்நமண பூபாலன் அந்த
    துரைராசன் தளகர்த்தன் தனுவண்ணபிள்ளை

அண்ணேவா தனுவண்ணபிள்ளை வடக்கே
    ஆம்காடுநபாபைநான்காணவேபோறேன்
கோட்டையுடவளப்பந்தெரியாது எனக்கு
    குபீரென்றுசந்திப்புவயணந்தெரியாது
மறுவயணந்தந்திரமுஞ்சொல்லி எனக்கு
    வரவிடவேணுமென்றெழுதியேயனுப்ப
தனுவண்ணபிள்ளையதைவாங்கி அப்போ
    தயிரியமாய்வக்கணையைவாசித்துப்பார்த்து
சிங்கமேதாண்டவராயா ஒரு
    சேதிநான்சொல்கிறேன்கேளுதளகர்த்தா
சனத்தைவிட்டுஉங்களிருவரையும் அவன்
    தப்பாககோட்டைக்குள்வரச்சொல்வானண்ணே
கோட்டைக்குள்போகவேண்டாம் வெளியே
    கோணமலைமைதானமல்துரையைவரச்சொல்லி
இருபேரும்பேட்டிசெய்யுமென்று அப்போ
    எழுநூறுபேர்தலையில்உலுப்பைகட்டியனுப்ப
தனுவண்ணனுலுப்பைகளையெல்லாம் அப்போ
    தளகர்த்தரிருபேருங்கண்ணாலேகண்டு
பூரணியைவாசித்துப்பார்த்து அப்போ
    பொங்கமாயிருபேருஞ்சந்தோஷமாகி
இதுமட்டுஞ்சொன்னதேபோதும் என்று
    இலுப்பையூர்மைதானவெளியுங்கடந்து
சாத்தனூர்வெளியுங்கழித்து நல்ல
    தைரியமாய்ப்பொன்மலைக்குமேற்பாரிசத்தில்
கோட்டைக்குத்தென்பாரிசத்தில் அப்போ
    குபீரென்றுயிருபேருமிறங்கினமாத்திரத்தில்
சிங்காரத்தோப்பில்நபாபு அப்போ
    சீவாசுகம்பளியில்நித்திரைபோம்போது
கோட்டைமேலிருந்தசிப்பாயி அப்போ
    கோடையிடிபோல்சாமன்ஏறிட்டுப்பார்த்து
அலங்கம்விட்டுக்கீழேகுதித்து நல்ல
    யானைகட்டுமண்டபத்தெருவுங்கடந்து
ராமசாமிவாசற்படிதாண்டி அப்போ
    நபாபுதேவடியில்வந்துநின்றுராமன்
அவுல்தார்சுபேதாருமாரை நம்மிட
    ஆண்டவன்நபாபுதுரையெங்கேயென்றுகேட்டான்
சிங்காரதோப்பில்நபாபு இப்போ
    சீவாசுக்கம்பளியில்நித்திரைகளென்றார்

சொல்லிவாய்மூடுமுன்னேராமன் நபாபு
சிங்காரத்தோப்பிற்குள்சீக்கிரமாய்வந்தான்
மம்முதலிதித்திரைவேளை அப்போ
மறத்திமகன்புலித்தேவன்துடைகுத்தியிருக்க
தட்டியெழுப்புலித்தேவா கோட்டை
தனங்கொண்டுயின்றைக்குக்களவுபோகுதென்றான்
திடீரென்றுமம்முதலியெழும்ப வெளியே
தென்பாரிசந்தனில்கனகதப்புமுழங்க
கனகதப்புமுழங்குதொருபக்கம் அதனைக்
கணவளர்நபாபுசாய்பேதென்றுகேட்க
ஆருடையதளமோவதுசாமி அதனை
அறியவேகூடவில்லைநபாபுசாய்பு
கார்மேகம்வந்துவளைந்தாற்போல் நமது
காக்காதோப்புவெளிகொள்ளவில்லைசாய்பு
கேமலும்வந்திட்டான்முன்னே அதிலே
கெடிசிங்கமூசுரநகிபெரியதுரைவந்தான்
சின்னப்பிரட்டனும்வந்தான் அப்போ
சீராகமூவரும்சலாம்வாங்கிக்கொண்டார்
அப்போதுமம்முதலிசாய்பு பாதர்
அஞ்சாததுரைசின்னப்பிரட்டனைப்பார்த்து
வந்தவர்களின்னாரென்றறிந்து நீயும்
வகையாகவெந்தனுக்குசொல்லென்றுசொல்ல
சீனிக்கண்ணாடிவைத்துபிரட்டன் அந்த
திசைநோக்கியேதிட்டுப்பார்த்தேதுசொல்வான்
ஆண்டவனேமம்முதலிசாய்பே உமது
அடிமைநான்பிரட்டனினிசொல்லுகிறேன்கேளும்
ஐதருடபாளையமல்ல சாய்பு
அன்பானமூவாசர்பாளையமல்ல
தஞ்சாவூர்பாளையமுமல்ல நபாக்
சாதித்துரைமார்கள்பாளையமுமல்ல
கருங்காட்டுமறவர்களைப்போலே எனக்கு
காணுதுகுத்தீட்டிதோணுதுசாய்பூ
சண்டைக்குவந்தவர்களல்ல இவர்கள்
சந்திப்புக்குவந்ததாகக்காணுதுவென்றான்
(அப்போ)திடீரென்றுநபாபுசாய்பெழுந்து வெளியே
தெற்கேபோகவேணுமென்றுநடக்கும்வேளையிலே
மருதுமல்லிகான்துரையும்வருக அந்த
மன்னவன்கேமல்துரைபின்னாலேவருக

துரைபெரியபிரட்டனும்வருக பாதர்
துடியானகானல்துரைபின்னேவருக
பாட்சாதிசோண்டனுடனே நெருங்கி
பத்துப்பாருசிப்பாய்கள்சுற்றிலும்வருக
தேவேந்திரன்கொலுப்போல சாய்பு
தெற்குக்கோட்டைதலைவாசல்அலங்கத்திலேறி
குழியென்றுவழிட்டுப்பார்த்து அப்போ
கோபமுடன்மம்முதலிகலக்கமேகொண்டு
பீறங்கிசிப்பாய்களையழைத்து மூன்று
பீறங்கியைத்திருப்பவுத்தரவுசெய்து
மத்திசத்துருப்பிலேநூறு நல்ல
வணயானகோண்டன்துருப்பிலொருநூறு
பிரட்டனதுதுருப்பிலேயுநூறு இப்படி
பிரியமாய்முன்னூறுகுதிரைகளைக்கூட்டி
வந்தவர்களாரடாபூலி அவர்கள்
வளப்பந்தெரியுமேபார்த்துச்சொல்லென்றான்
சேதுபதிசின்னமறவன் சேது
சமஸ்தானமென்றுசொல்லக்கேட்டிருப்பேனென்றான்
ஆனைக்காலர்க்காரராமு அவர்க
ளாரென்றுபோய்நீயும்கேட்டுவாவென்று
மம்முதலிதேவடிபோய்ச்சேர்ந்தார் ராமன்
வருகிறான்தெற்குக்கோட்டைத்தலைவாசல்தாண்டி
கான்மியாபள்ளியுந்தாண்டி நல்ல
கனமானதஞ்சைநகர்பாலங்கழித்து
ரெட்டைமலைவீதியுந்தாண்டி அப்போ
நேரிட்டகாக்காய்தோப்பையுங்கழித்து
பொன்மலைமைதானவெளியில் ராமன்
பிள்ளைமாசமுகத்தில்வந்துநின்றுகொண்டு
வந்தவர்களாரென்றுசொல்லி ஒருவர்
வசனம்நபாபுதுரைகேட்டுவரச்சொன்னார்
மறவருடபிறதானிநாங்கள் இங்கே
வந்தோம்நபாபிடம்சொல்லுபோராமு
சண்டைக்குவந்தீரோநீங்கள் இப்போ
சந்திப்புக்குவந்தீரோகேட்டுவரச்சொன்னார்
தகப்பனதுவளவுக்குராமு நாங்கள்
சந்திப்புக்குவந்தோமென்றுசொல்லுபோராமு
திரும்பினார்ஆர்க்காரராமு பூாது
சிங்கம்நபாபுதுரைதேவடியில்வந்து

ஆண்டவினைமம்முதலிதுணையே நாங்
அறிந்துவந்தசேதிகளைச்சொல்லுகிறேன்சேரு
மறவருடபிரதானியவர்கள் சாப்பு
வந்திருக்கும்வேடிக்கைசொல்லமுடியாது
இவர்களைஇப்படிவந்தால் இவர்கள்
துரைவந்தாலெப்படியிருக்குமோவென்றான்
புறத்திலேயிருந்தபுலித்தேவன் நல்ல
புலிகுட்டிநபாபவரையேறிட்டுப்பார்த்து
வெகுமோடியாய்வந்தானென்று மெத்த
விரியமாய்ச்சொன்னனேயர்க்காரராமன்
முத்தவர்கள்சீமையிலேவிளையும் சாப்பு
ரசக்கிணறுசேதுபதிசீமையிலேயுண்டு
முப்போகம்விளையுமவர்சீமை அங்கே
முறியாதணைவைபந்திசேர்ந்ததவன்தேசம்
பனங்காடுபெருத்தவன்சீமை அதிலே
பத்துங்கிலேபேரிகள்மெத்தவுமுண்டு
கல்லுப்படாதொருசோறு மதிலே
முள்ளுப்படாதமீன்மறவருடசீமை
காசிமுதலாகத்திரிந்தாலும் மறவர்
சீமையைப்போலொருதேசங்கிடையாதுசாப்பு
இருபத்திரலுலட்சம்பொன் சீமை
இவர்களையாருநாரிருபிள்ளைமாரும்
இருபிள்ளைமார்களையும்பிடித்தால் தேச
மெல்லாமொருகுடைக்கீழாளலாமென்றான்
இருபிள்ளைமார்களையும்பிடிக்க தந்திரம்
புலித்தேவாமறுவயணஞ்சொல்லென்றுகேட்டார்
சனத்தோடவந்தானேயானல் முள்ளைத்
தாண்டவராயன்வெல்லப்போகாது
முப்பதுநோன்பென்றுசொல்லி நபாபு
முடிமன்னாவெளியில்வாக்கூட்டிப்போ
கத்திகேடயமுதலாய்வேண்டாம் உனது
சனமானஅடப்பக்காரர்முதலாகவேண்டாம்
இருபிள்ளைமாரையும்நபாபு இந்த
நாழிகையில்கோட்டைக்குள்வரச்சொல்லுமென்றான்
இப்படிபுலித்தேவன்சொல்ல ராம
விடத்திலேநபாபுசாயபுசங்கதியைச்சொல்லி
தந்திரமாயிருபிள்ளைமாரை இந்த
நாழிகையில்கோட்டைக்குள்கூட்டிவாவென்றார்

வருகிருனர்க்காராமன் அப்போ
மம்முதலிசிதவடிகாணுவுந்தாண்டி
தெற்குக்கோட்டைவாசலுந்தாண்டி ராமன்
திடீரென்றுபிள்ளைமார்சமுகத்தில்வந்து
அரேபிள்ளைமுல்லைமணிமார்பா பாதர்
அனைவர்புகழ்நபாபுசாய்புசொல்லுகிறாண்ணே
முப்பதுநோன்பெங்கள்துரைக்கு இப்போ
முடிமன்னன்கோட்டைவிட்டுவெளிவரக்கூடாது
மனிதர்களொருவருங்கூடாது நல்ல
பணமுடனேகத்திகேடயமும்வேண்டாம்
இருபிள்ளைமாரையும்நபாபு இந்த
நாழிகையில்கோட்டைக்குள்கூட்டிவரச்சொன்னார்
நீங்கள்வந்தவேலைநல்லவேளை இப்போ
இருவருமெழுந்திருந்துவாங்களென்றுசொன்னான்
இப்படியர்க்காரன்சொல்ல அதை
இந்திரன்தாமோதரம்பிள்ளையுங்கேட்டு
அண்ணேவாதாண்டவராயா இப்போ
அன்பாகவொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
குண்ணக்குடிதனிலேயிருந்து திருக்
கோட்டியூர்தனைக்குநான்சொன்னேனேபுத்தி
கேளாமல்வந்தையேநீயண்ணே இப்போ
கேடுவந்துநேர்ந்துதேயென்செய்வோமென்ருன்
போபோபேய்கொண்டதம்பி உனது
புத்தியுமிதுமட்டோதாமோதரம்பிள்ளை
வாடாநீஅக்காரராமு ஒரு
வார்த்தைநான்வேளாளன்சொல்லுகிறேன்கேளு
பெண்டாட்டிபிள்ளையும்விட்டு நாங்கள்
பெரியோர்கள்சமஸ்தானமாளிகையும்விட்டு
துரைமகன்குழந்தையும்விட்டு இந்தச்
சுபானுவருஷத்துப்பஞ்சகாலத்தில்
தகப்பனைகாணவேணுமென்று இத்தனை
தளதூதோடேவநதோமேயர்க்காராமு
இருவரையும்வரச்சொல்லிசொல்ல உங்கள்
ஈஸ்பரன்அல்லாவுக்கேற்குமேர்ராமா
இருவரையும்வரச்சொன்னபோதே எனக்கு
இருதயங்கலவரமாயிருக்குதடாராமா
சந்திப்புஎங்களுக்குவேண்டாம் உங்கள்
சாப்புகிட்டமறுவயணஞ்சொல்லுபோராமா
போகாதேமுல்லைமணிமார்பா நாங்கள்
புலிகுட்டிநபாபிடத்தில்சேதிசொல்லிவாறேன்

அதுவரைக்குப்பாளையத்தைநிறுத்தி   என்று
அர்க்காராமனுநடந்துவிட்டான்திரும்பி
திடீரென்றுசமுகத்தில்வந்து   பாதர்
சிங்கம்நபாபைசலாம்பண்ணிக்கொண்டு
ஆண்டவனேநபாபுசாய்பே   உனது
அடிமைநானொருவயணம்சொல்லுகிறேன்கேளு
அதிலொருவன்பட்டாணிவாரான்   அவனும்
அல்லாவைவணங்கிறான்சொல்லப்போகாது
அறிந்துஇருப்பையபடாபூலி   அவ
ஞாடாவயணஞ்சொல்லென்றுகேட்டான்
அவன்தான்தாண்டவராயன்   அவன்
வார்த்தைக்குமறுவார்த்தைசொல்லமுடியாது
இப்படிபூலியுஞ்சொல்ல   கேட்டு
எதுசொல்வான்நபாபுக்குஅர்க்காராமன்
தகப்பனைகாணவேணுமென்று   இத்தனை
தளத்தோடேவந்தானும்தாண்டவராயன்
இருவரையும்வரச்சொன்னபோதே   அவனுக்கு
இஷ்டமேயில்லையாம்இவிடம்வந்துபோக
சந்திப்புமிரிந்துதென்றுசொனனான்   அவன்
சனத்தோடேசிவகங்கைபோரேனென்றுசொன்னான்
நபாபைதான்கண்டுவருமட்டும்   உனது
நலமானபாளையத்தைநிறுத்தென்றுவந்தேன்
இதற்குமேறுவயணம்சாய்பு   எனக்கு
இப்போதுசொல்லுமென்றுகேட்டானோராமன்
மறத்திமகன்சொல்மொழியைகேட்டு   பாதர்
மம்முதலிசாய்புதுரையேதுசொல்வானும்
கோட்டைக்குதென்பாரிசத்தில்   அங்கே
குளிர்ந்ததோர்காக்காத்தோப்புவெளிதனிலே
மூன்றுமூலைகூடாரமடித்து   அங்கே
மூன்றுநல்பீரங்கிதானுமேயேற்றி
பதினைந்துகுறுக்குவெளிபரப்பி   அங்கே
பண்பானபூப்பந்தல்லங்கரிக்கச்சொல்லி
நாற்பதுபறங்கிநாற்காலி   அதிலே
நற்சவுக்கமாகவேபோட்டிடச்சொல்லி
எழுபாராசுற்றிலும்வைத்து   நல்ல
ஈஸ்பான்நபாபுதுரைபுறப்பட்டார்வெளியில்
ஏறினார்வெள்ளைஅவுதாவில்   அப்போ
இருபுறமும்தம்பூருமுழங்கதொருபக்கம்

நகபத்துமுழங்கதொருபக்கம் அங்கே
நகாரமுழங்குவதுசொல்லப்போகாது
பூனனூறுவதுநப்புகுதிரை செநற்றி
முன்னணியாகவேவருதுபிறகாலே
கருஞ்சட்டைகாரரொருபக்கம் நல்ல
கறுப்புவர்னப்பறங்கிகளைச்சொல்லமுடியாது
செஞ்சண்டைகாரரொருபக்கம் ஆழ
சிங்கநவாபுதுரைவெளியில்வருகையிலே
காலையில்செம்மான்மெழுக்தாற்போல் பாதர்
கனகமுடிநபாபுதுரைபுறப்பட்டார்வெளியில்
துரைவந்துகொலுவிருந்தாரென்று அப்போ
துடியாகத்தாண்டவனும்வெளியிலேவந்து
தம்பிவாதாமோதரம்பிள்ளை நல்ல
தளவாயேனஅவுதாவிலேறடாவென்றான்
அவுதாவில்நானேறமாட்டேன் சும்மா
ஆனைமேல்நீயேறிவாவென்றுசொன்னான்.
பெரியவீட்டுக்காரனல்லோநீயும் தம்பி
உன்னைவிட்டுயானைமேலேறமாட்டேனும்
அதினாலேசந்தோஷமொன்றுமில்லை சும்மா
ஆனைமேலேறடாமுல்லைமணிமார்பா
ஆனைமேல்நானேறியிருந்தால் இறங்க
அரைநாழிசெல்லுமேமுல்லைமணிமார்பா
ஏறுவதுபஞ்சகலியாணி இன்றைக்
கெடுக்கிறதுரண்டுகையில்ரண்டுமுகப்பட்டா
நபாபுக்வுத்துஞ்செய்தாக்கால் நமது
நாய்க்கன்மறவனுககுப்பேரிருக்கவேணும்
வெட்டுறேனொருவெட்டுபாதர் என்று
மீசைமேலகைபோட்டான்தாமோதரம்பிள்ளை
எதுவந்தாநேர்ந்தாலுதம்பி நமது
ஈசன்மகன்குமரன்கிருபையிருக்குதென்று
இருபேருமெண்ணிக்கைகொண்டு முப்பத்
தேழாயிரஞ்சேனமுமெண்ணிக்கைகொண்டு
துப்பாக்கியொருபுறம்வருகுது நல்ல
துடியாகிசர்போகியொருபுறம்வருகுது
சஞ்சாலியொருபக்கம்வருகுது அப்போ
தனங்கொண்டவேல்க்காரரொருபுரம்வருகுது
மின்னல்மழைமாரியதுபோலே அதிலே
வெள்ளிகட்டுதுப்பாக்கிசொல்லப்போகாது

ஆயிரந்துப்பாக்கிமட்டுந் — தனது
யானைதனைச்சுற்றிவரச்சொன்னான்காரானன்
மூன்றுனையேலேநகபத்து — துப்போ
மூட்டினேனெமொட்டையேலேநகாரா
அனுமந்தடாலுந்துலங்க — நல்ல
அழகாவலம்புரிச்சங்குநின்றாத
ஜகசம்படாலுந்துலங்க — அதிலே
சந்திரகாந்திபட்டாடையிருபுறமுவீச
மகரக்கொடிவிருதுநின்றிலங்க — நல்ல
வளமானபூச்சக்கரக்குடைகள்துலங்க
திருமலைநாய்க்கனுக்குத்தொண்டன் — டப்பை
எழுபதுபாளையக்காரருக்குமுண்டன்
சத்ராதிகொட்டாடகியென்று — நல்ல
தைரியமாயிருபுறமுங்கட்டியங்கூற
தேவேந்திரன்வந்தாற்போலே — பாதர்
திடீரென்றுஇருபெரும்புறப்பட்டார்வெளியில்
புறத்திலேயிருந்தபுலித்தேவன் — அப்போ
புலிக்குட்டிநபாபுசாய்பேதுசொல்வானும்
ஆண்டவனேமம்முதலிசாய்பே — உனது
அடிமைநானொருவசனஞ்சொல்லுகிறேன்கேளு
எத்தனையோகமிருந்தாலும் — இவர்கள்
பட்டோலையெழுதுகிறவெள்ளாழசாதி
ஆண்டவனிர்ப்பிறுக்கையிலே — அவர்கள்
ஆனைமேல்வருகிறதுசம்மதியோவுமக்கு
யானைவிட்டுக்கீழேயிறங்கி — அவரைக்
கால்நடையாய்கூட்டிவரச்சொல்லுங்களென்று
அர்க்காரராமனையழைத்து — துரை
ஆலோசித்துமம்முதலியேதுசொல்வானும்
பிள்ளைமாரிருவரையும்ராமா — இப்போ
கால்நடையாய்வரச்சொல்லிகூட்டிவாவென்றான்
ஒருபட்டாளந்தன்னைக்கூட்டி — ராமன்
உயர்ந்தைத்தும்பிக்கையைக்கையால்பிடித்து
அரேபிள்ளைமுல்லைமணிமார்பா — நமது
அரசன்நபாபுதுரைசொல்லுகிறாரப்பா
ஆண்டவன்கிட்டிருக்கையிலே — நீயும்
ஆனைமேல்வருகிறதுசம்மதியோஉனக்கு
ஆனைவிட்டுக்கீழேயிரங்கென்று — அப்போ
ஆயிரந்துப்பாக்கிகுந்தாலினாலே

ஒருபலித்தயானையின்மேல்மோத பாதர்
உத்தமன்தாமோதரன்எறிட்டுப்பார்த்து
எறினன்பஞ்சகலியாணி அப்போ
இடதுகையில்வாங்கினன்ரண்டுமுகப்பட்டா
வலதுகையிலேந்துமணிக்குறடா பாதர்
வாங்கியேகடிவாளந்துடைதனிலணைத்து
ஆனைதனைமூன்றுதரஞ்சுற்றி பாதர்
அதட்டிநபாபுதுரைபானையத்தைப்பார்த்து
யானைவிட்டுவிலகுவிலகென்று நல்ல
அழகானயானைதனையடிக்கிறதுபோல
குதிரைதனையடிக்கிறதுபோல வைத்து
கொளுத்தினன்நபாபுசனத்தின்மேற்பூசை
ஒருத்தரோடொருத்தர்தட்டுக்கெட்டு அவர்கள்
ஒருமிக்கப்பின்வாங்கிநெளிக்கும்வேளையிலே
அவுதர்மேலிருந்ததளமந்திரி நல்ல
அதிவீரன்முல்லைமணித்தாண்டவராயன்
மிஞ்சாதேபொறுபொறுதம்பி இது
வெள்ளைக்காரர்பொருத்தவிடம்தாமோதரம்பிள்ளை
ரண்டுசேக்காளைவைத்திருப்பிவிட்டால் நமது
பனங்காட்டுபாத்தியல்லாமுடன்காடுமுளையும்
மிஞ்சாதேபொறுபொறுதம்பி என்று
வேளாளன்அர்க்காராமனையழைத்து
முப்பதுபொன்துப்பட்டாவெடுத்து அப்போ
முதலானராமனுடல்மேலேபோர்த்தி
அன்பதுவராகனையுமள்ளி அந்த
நாழிகையில்பாக்குவெற்றிலைசெலவுக்குக்கொடுத்து
கஞ்சாவபின்தின்பான்தம்பி அவனுக்கு
கனமானலாகிரிபொல்லாததுடுக்கன்
அவன்செய்தகுற்றத்தைதம்பி நீயும்
அறிக்கையிடாதேதோராமநபாபுதுரைக்கு
நானுமொருசேதிசொல்லுகிறேன் உங்கள்
நபாபுதுரைக்குநீசொல்லுபோராமு
அதிபதிகெசபதியேசிங்கம் இங்கே
நரபதிசேதுபதிநாலுபதியல்லோ
நாலுபதிதன்னிலேராமு இப்போ
நாங்களொருபதிவந்துசேருபதிசேர்ந்தோம்
கர்த்தாக்களுக்குமுன்னேபட்டம் வந்து
கனமானலங்காபுரிதனிலே

சீதையைச்சிறைதனிலேவைக்க ராமர்
சென்றுமேதென்னிலங்கைராவணனைச்செயித்து

விபீஷணனுக்குப்பட்டங்கட்டி ராமர்
விரைவாகராமேஸ்வரம்வந்துசேர்ந்து

ராமலிங்கத்தைப்பூசைசெய்து அன்றைக்கு
நலங்கொண்டேகோவிலுந்திருமதிலுங்கட்டி

சிவபத்திமறவாதபேர்கள் வேறு
மென்றுசொல்லிஸ்ரீராமர்தான்வைத்தபட்டம்

துளவமணிராமர்பட்டம்பெற்ற நாங்கள்
துரைநபாபவர்களிடபேட்டிக்குவந்தால்

கால்நடையாய்வருவமோராமா அவரும்
கால்நடையால்வரச்சொல்லிசொன்னாரேயானால்

சந்திப்புமுறிந்துதடாபோபோ உங்கள்
சாய்புகிட்டமறுவயணஞ்சொல்லடாராமா

திருப்பிடாயானைமுகந்தெற்கே என்று
சிங்காசனாதிபதிகூட்டினான்பயணம்

போகாதேமுல்லைமணிமார்பா ஒரு
உத்தரவுநபாபிடங்கேட்டோடிவாரேன்

அவ்வளவில்பானையத்தைநிறுத்து என்று
அர்க்காராமனும் நடந்திட்டான்திருப்பி

மம்முதலிசமுகத்தில்வந்து ராமன்
வகையானசேதிகளைசொல்லலுற்றானப்போ

ஆண்டவனேமம்முதலிதுரையே உனது
அடிமையொருவசனம்நான்சொல்லுகிறேன்கேளு

அதிலொருத்தன்பட்டாணிபோல்வாரான் அவன்
அல்லாவைநினைக்கிறான்சொல்லமுடியாது

(அவன்) முகத்திலேகோபங்கள்துரையே அவன்
முன்னின்றுமனிதரால்பார்க்கமுடியாது

அவனிடகைகத்திக்குதுரையே நமது
ஆயிரங்கத்தியுமெதிரில்லைசாய்பு

அறிந்துமிருப்பையடாபூலி அவ
னாடாமறுவயணஞ்சொல்லடாவென்றான்

அவன்தானையா பெரியவீட்டுக்காரன் சாய்பு
சேதுபதிதளகர்த்தன்தாமோதரம்பிள்ளை

வெட்டுங்கைதாமோதரம்பிள்ளை சேதி
கட்டுங்கைமுல்லைமணித்தாண்டவராயன்

இருபேருமொன்றாகச்சேர்ந்தால் தேவ
இந்திரனும்வந்தால்வெல்லக்கூடாதென்றான்

அதுக்குள்ளேராமனுமெழுந்து பாதர்
ஆண்டவன்நபாபுக்குவந்துசொல்வானும்
ஆனைமேல்வந்ததளமந்திரி சாய்பு
அவன்சொன்னசங்கதியைச்சொல்லுகிறேன்கேளு
அதிபதிகெசபதிசிங்கம் வர
நரபதிசேதுபதிநாலுபதியுண்டு
நாலுபதிதன்னிலேதுரையே அவர்கள்
தானுமொருபதிவந்துசேதுபதிசேர்ந்தார்
கர்த்தாக்களுக்குமுன்னபட்டம் பெற்று
கனமானதென்னிலங்காபுரிதனிலே
சீதையைராவணனெடுத்துக்கொண்டு போய்
தென்னிலங்காபுரியில்சிறைவைத்தபோது
ராமரெழுபதுவெள்ளஞ்சேனை கூட்டி
ராவணசம்மாரமுடித்தமாத்திரத்தில்
சீதைதனைதேரின்மேலேற்றிக் கொண்டு
தென்னிலங்கைவிபீஷணர்க்குப்பட்டமுங்கட்டி
ராமேஸ்வரம்வந்துசேர்ந்து பின்பு
ராமலிங்கத்தையவர்பூசையேசெய்து
சிவபத்திமறவாதோரிவர்கள் என்று
ஸ்ரீராமர்கொடுத்தாராம்மறவரென்றபட்டம்
நபாபுபேட்டிக்குவந்தால் நாங்கள்
கால்நடையாகவேநடந்துவரமாட்டோம்
சந்திப்புமுறிந்துதட்டாபோபோ உங்கள்
சாய்புகிட்டமறுவயணஞ்சொல்லென்றுசொல்லி
திருப்பினான்யானைமுகம்தெற்கே நானுங்
சிங்கம்நபாபைப்போய்கேட்டோடிவாரேன்
அவ்வளவில்பாளையத்தைநிறுத்தி நின்று
அடிமைநான்மறுவயணஞ்சொல்லிவிட்டுவந்தேன்
இதற்குமறுவயணமென்னசாய்பு அதை
இப்போதேசொல்லுமென்றுகேட்டானேராமன்
ஆனைமேல்வரச்சொல்லுராமா என்று
அனைவர்புகழ்நபாபுதானசொல்லிவிட்டாரப்போ
திரும்பினான்அர்க்காரராமன் அப்போ
திடலென்றுபிள்ளைமார்சமுகத்தில்வந்து
இருவரையும்அவதானிமேலேற்று எங்கள்
ஈஸ்பரன்நபாபுதுரைவரச்சொன்னாரையா
ஆனையின்மேல்வாங்களென்றுசொல்லி அந்த
அர்க்காரராமனும்உறுதியாய்ச்சொல்ல

இருபேரும்யானைமேலேறி முப்பத்
தேழாயிரஞ்சேனத்தைமுன்னேநடத்தி
தேவேந்திரன்கொலுப்போல அப்போ
திடீரென்றுபிள்ளைமார்நடந்திட்டாரப்போ
இருபிள்ளைமார்களும்வந்து அங்கே
எழுபிள்ளைமாரிருக்குமிடத்தில்வந்துநின்று
ஆனைவிட்டுக்கீழேயிறங்கி தளவர்
அன்பாகவொன்பதுதட்டெடுத்துவரச்சொல்லி
ஒருதட்டிலொருசோடுமுத்து அப்போ
ஒருதட்டிலொருசோடுபச்சையும்வைத்தும்
ஒருதட்டில்வயிடூரியக்கல்லு நாது
ஒருதட்டில்மரகதக்கல்லொன்றுவைத்து
ஒருதட்டிலாயிரம்பொன்முடிப்பு அப்போ
ஒருமிக்கத்தட்டெல்லாஞ்சேகரஞ்செய்து
தம்பிவாதாமோதரம்பிள்ளை நாலு
தட்டையெடுத்துவாவென்றுசொன்னமாத்திரத்தில்
கங்கைகுலம்வம்மிசம்அண்ணே நாமும்
காராளரல்லவோமுல்லைமணிமார்பா
துலுக்கனுடசந்திப்புக்குபோறோம் நமக்குச்
சந்திப்புயெப்படித்தெரியுமடாஅண்ணே
எத்தனைஉயர்ந்தகுலமாய் நாம்
இருந்தாலும்குமாரவர்க்கபிள்ளையென்றுபேரு
திருச்சிறைப்பளிக்குஅவன்துரைதான் இந்தத்
தேசததுப்பாளையக்காரரெல்லாம்பிள்ளை
தகப்பனுடவளவுக்குப்பிள்ளை வந்தால்
தனங்கொண்டுபோய்வைத்துசலாம்பண்ணவேணும்
காரியங்கொள்ளுமட்டுந்தம்பி அவன்
காலையுங்கூடப்பிடிக்கவேணுமென்றான்
எனக்கொன்றுந்தெரியாதுஅண்ணே உனக்
கெப்படியிருக்குதோஅப்படிசெய்யென்றான்
அப்படியேநல்லதுதம்பி நீயும்
அசையாமல்தட்டுகளையெடுத்துவாவென்று
இருபேருமொன்பதுதட்டெடுத்து எழு
பாறுவையுங்கடந்துகூடாரம்வந்து
நபாபுசமுகத்தில்நின்று நல்ல
நலங்கொண்டதங்கமலர்பொன்மலரெடுத்து
தீபாசுகம்பளியில்வைத்து இவ்விடுச்
சிதையனதையிலேசீக்கிரமெடுத்து

கப்பலைப்மூன்றுதரஞ்சுற்றி சாய்பு
நம்முடையசகாம்வருகுதென்றுசலாஞ்செய்து
இருபேரும்விழுந்துசலாஞ்செய்தார் அப்போ
எழுந்திருந்துநபாபுசாய்புகையாலெடுத்து
தூக்கியேமார்போடணைத்து அப்போ
துரிதமாயிருபேர்க்குமிருக்கவிடங்கொடுத்தார்
இருந்தபின்தாண்டவராயன் பாதர்
இயலானபறங்கிகளைக்கண்ணாலேகண்டு
படப்டென்றுமிரண்டுமயமாகி அப்போ
பதறியேதிரேகமெல்லாம்வேர்வையொழுக
லேஞ்சுகொண்டுவேர்வைதனைத்துடைத்து அப்போ
ரெண்டுபேர்விசிறிகொண்டுவிசிறினமாத்திரத்தில்
ஆடுதேபடபடென்றுமேலும் அதை
அருகில்நின்றநபாபுதுரையேறிட்டுப்பார்த்து
பாளையங்கண்டவுடனண்ணே உனக்குப்
பயமாகியுடம்பெல்லாம்நடுங்குதென்னவென்றார்
கணைதெளிந்துதாண்டவராயன் அப்போ
கண்திறந்துபார்த்தவனுமேதுசொல்வானும்
தாய்வயிற்றிலேயிருந்துநானுஞ் சாய்பு
தரையில்விழுந்தநாள்முதலாகஎனக்கு
வந்ததொருசன்னிநோக்காடு என்னை
மனிதர்களசுற்றினுநெருங்கியேநின்றால்
நடுக்கமெடுப்பதெல்லாம்போச்சு இப்போ
நல்மாயுன்னிடங்கண்டபோதேயுனக்கு
இருந்ததொருபயமெல்லாஞ்சாய்பு எனக்கு
எள்ளளவுமில்லாமலோடியேபோச்சு
என்றுதாண்டவராயன்சொல்ல நல்ல
இதவாகநபாபவருமேதுசொல்வாராம்
சந்தனங்கொண்டுவாச்சொல்லி அப்போ
தயிரியமாய்பிள்ளைமார்க்குப்பூசவேண்டுமென்று
ஒருபிடிவராகன்கலந்து வெள்
கும்பாவில்சந்தனமுஞ்சவ்வாதுங்குழைத்து
பூசுங்களிருபிள்ளைமாரும் என்று
புண்ணியநபாபுதுரைமுன்னெடுத்துவைத்தார்
சந்தனம்பூசினேமேயானால் அந்தத்
தக்ஷணங்கட்டைவரட்டியடுக்கவேணுஞ்சாய்பு
சன்னிநோக்காட்டுக்காகாது துரையே
சந்தனம்பூசுகிறதில்லையென்றுசொன்னான்

தாமோதரப்பிள்ளையுமப்போது முல்லை
தாண்டவராயன்முகம்ஏறிட்டுப்பார்த்து
காபுக்குக்காதுகேழ்க்காமல் இவர்கள்
கலமாசயிருவரும்வாய்ஜாசைகையாக
சந்தனம்பூசினாலண்ணே நமது
சாதிக்குளர்க்காதோமுல்லைமணிமார்பா
போபோபேய்கொண்டதப்பி உனது
புத்தியுமிவ்வளவோதாமோதரம்பிள்ளை
சந்தனம்பூசினமேயானால் வெய்யில்
சலவையிலேதண்ணீர்தாகமதுகாணும்
தண்ணீருவேண்டுமென்றுகேட்டால் அப்போ
தண்ணீரண்டமணையிலிருந்துகொண்டுவந்து
பிள்ளையென்றுவந்தீரேநீங்கள் என்னுடைய
தண்ணீர்குடியுமென்றுமுன்னாலே வைப்பான்
குடிக்கவேணுந்தள்ளமுடியாது தம்பி
குபீரென்றுசந்தனம்பட்டவிடமெல்லாம்
வெந்துவிரிந்துவிடுந்தம்பி என்று
வேடிக்கையாய்க்கத்துவாரிக்கூண்டைத்திறந்து
வெளியிலேவிட்டிட்டாரப்போ இந்த
வேடிக்கைநவாப்புப்பார்த்தேதுசொல்வாராம்
காட்டிலேதிரியுமந்தக்குருவி இதை
என்னத்துக்குக்கொண்டுவந்தாய்தாண்டவராயா
சொல்லிவாய்மூடுதற்குள்ளே ரண்டு
கத்துவாரியையெடுத்துச்சண்டைக்குவிட்டான்
ஒருசாமபரியந்திரமட்டும் அது
ஒன்றுக்கொன்றெதிர்த்துநின்றுசண்டைசெய்கிறதை
மம்முதலிகண்ணாலேகண்டு பாதர்
மன்னவன்மனதுமிகச்சந்தோஷமாகி
காட்டிலேதிரியுமிந்தக்குருவி இதுவும்
கையிலேயிவ்வளவுபழக்கமாயிருந்தால்
மனிதருன்கையிலகப்பட்டால் அவரை
என்னபாடுபடுத்துவையோதெரியாதுநீயும்
என்றுசொல்லிவாய்மூடுமுன்னே அப்போ
எண்ணிக்கையாய்மூன்றுபணியாரமெடுத்து
பணியாரஞ்சபைதனிலெறிந்தான் அது
பாங்காகநெளியுறதைத்துரைமார்கள்பார்த்து
ஐந்தாறுவெள்ளைக்காரதுரைகள் அப்போ
ஐந்தாறுபணியாரங்கையிலேயெடுத்து
பிட்டதனைப்பார்த்தார்கள்துரைகள் சிட்டுக்
குருவிபதனுள்ளிருந்துபறக்கிறதைக்கண்டு

சபாசுமுல்லைமணிமார்பா இப்போ
தளதந்தரிமதிமந்தரியுன்க்கேதான்செல்லும்
இருபதிங்காதவழிதூரம் நீயும்
எனைத்தேடிவந்தவகைசொல்லென்றுகேட்டார்
ஆண்டவனேமம்முதலிசாய்பே உனது
அடிமைநானொருவயணஞ்சொல்லுகிறேன்கேளும்
உம்முடைய அரண்மனையிலிருந்து முன்னே
உப்புதண்ணீர்தூக்கித்திரிந்தானேபயல்கானு
மதுரைக்குத்துரையாகவந்து நல்ல
வைகைவளநாட்டையுமொருமிக்கக்கூடி
உமக்குநான்கொடுக்கிறபணத்தை கானு
தனக்கங்கேதரச்சொல்லிசண்டைக்குவாரான்
தகப்பனுக்குவஞ்சனையாய்கானு இப்படி
தகாதகாரியஞ்செய்வதையுமக்குச்சொல்லவந்தேன்
இப்படிதாண்டவனுஞ்சொல்ல அதற்
கேதுசொல்வார்மம்முதலிசாய்புதுரையவரும்
ஆரேபிள்ளைதாண்டவராயா பாதர்
அன்பாகவொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
ஏழரைவருஷங்களாச்சு நல்ல
இபல்பானகானனையுமதுரைக்கனுப்பி
ஒருகாசுங்கொடுத்தனுப்பவில்லை எனக்கு
ஒருபணமும்வடக்குவந்துசேரவுமில்லை
வழிப்பாதைதெரியாமல்தாண்டா நானும்
வடக்குமுகம்போகாமலிருக்கிறேனிங்கே
தெற்குமுகம்வழிகாட்டிவிட்டால் நானுந்
சீக்கிரமாய்பாளையத்தைகூட்டிவந்திடுவேன்
நான்வாரேன்திசைமதுரைக்கோட்டை எனக்கு
நல்மானபாக்குவெற்றிலைசெல்வுக்குவுனது
சிவகங்கைபேட்டைதனையெனக்கு விட்டுத்
தரவேணுமென்றுசொல்கேட்டார்நபாபு
சிவகங்கைபேட்டையுடவளப்பம் ராஜா
சிங்கமேநபாபேநான்சொல்லுகிறேன்கேளு
ஐந்தாறுதேவடியாள்வீடு அதிலே
ஆறேழுபார்ப்பாரவீடுமங்கேயுண்டு
கூவவுங்கோழிகிடையாது வந்து
குலைக்கவும்நாயதிலேகிடையாதுசொன்னேன்
அதைவிட்டுகொடுததென்னவென்று நல்ல
அன்பாககாராளன்சொன்னமாந்திரத்தில்

அதுபோனால்போகட்டும்பிள்ளே உனது
ஆரூருநாட்டைவிட்டுத்தருவையோவென்றான்
ஆரூர்நாட்டையவளப்பம் யாதர்
ஆண்டவனேநபாபேநான்சொல்லுகிறேன்கேளும்
காட்டிலேலக்டரிபிடிங்கி கள்ளர்
ஒட்டிலேயவித்ததனைத்தின்கிறவர்சாய்பு
இந்தச்சேதிசேட்டாரேயானால் நம்மை
இருவரையும்வழிமறித்துக்குத்துவார்கள்ளர்
அதுதான்போகட்டுந்தம்பி உனது
ராமநாதபுரக்கோட்டைதருவையோவென்றான்
ராமநாதபுரக்கோட்டைவளப்பம் நமது
ராஜபரமேஸ்வரசொல்லுகிறேன்கேளும்
ஒருபுறமண்ணேலேசவுறு அதிலே
யொருபுறம்வனந்திரக்காடதிலேயுண்டு
பதினைந்துஊழியக்கார்வீடு எங்கள்
சேதுபதிகுழந்தைவந்திருக்கிறது அதுவே
ராஜனிருக்கிறகிராமம் அதனை
நான்விட்டுத்தருவனென்றுசொல்வனேதுரையே
இப்படிபிள்ளைமகன்சொல்ல நல்ல
இயல்பாகநபாப்புதுரையேதுசொல்லலுற்றார்
தகப்பனுடவளவிற்குப்பிள்ளை வந்தால்
சாப்பிடவேணுமென்றுசொன்னார்நபாப்பு
சாப்பிடமாட்டேனென்றுநானும் சாய்பே
தாண்டவராயனுஞ்சொல்வனேதுரையே
முப்பதுநாளைக்குநோன்பெனக்கு நல்ல
முடிமன்னதாண்டவராயாவென்றுசொல்லி
கல்விழைத்தபச்சைச்சகலாத்து அப்போ
கனமானபிள்ளைமார்கைதனிலேகொடுத்து
நாலுவகைவெகுமதியுஞ்செய்து அப்போ
நபாப்புதுரையோசித்துச்சொல்லலுற்றாரப்போ
பிரட்டனெடுபனிரண்டுபட்டாளம் உனக்கும்
பின்கட்டுப்பாராவுமனுப்புகிறேனிப்போ
முப்பதுநோன்புகழித்தவுடனே நானும்
வருகிறேன்திசைமதுரைக்கோட்டைதனைநோக்கி
இதுசேதிமம்முதலிசொல்லி அப்போ
எழுந்திருந்துகோட்டைபோய்ச்சேர்ந்தார்நபாப்பு
இருபிள்ளைமார்களுஞ்சேர்ந்து மெள்ள
இதமாகவிடுதிவந்துசேர்ந்தார்களப்போ

மதுரைவளர்கான்சாய்புசீலன் நல்ல
வரிசைபெறத்தேவடியில்வந்துநின்றுகொண்டு
மைத்துனன்வடக்கேபோனானே அவன்
சீமைதனிலொருசாரிநடத்தவேணுமென்று
மறைக்குதிரைமேற்சீனிவைத்து மதுரைக்
கான்சாய்புகோட்டைவிட்டுவெளியில்வருகையிலே
ரேக்கலாபெண்டையுமிழுத்து அதற்கு
நேரிட்டமருந்துகுண்டுவண்டியின்மேலேத்தி
மூவாயிரஞ்சனங்காணு அப்போ
முன்னூறுவுருக்குச்சீருக்குதிரையுநடத்தி
மறைக்குதிரைமேலேறிக்கொண்டு மதுரைக்
கான்சாய்புசிலையுமான்புளியங்குளந்தாண்டி
சிலையுமான்புளியங்குளந்தாண்டி அப்போ
திருவாரூர்வையதானவீதியுந்தாண்டி
திருப்பூவணக்கோட்டையிலேவந்து கானு
திடலென்றுகூடாரமடித்தல்லோதுரையும்
மூணுநல்லமோர்சாவளத்தி அதிலே
முடிமன்னன்பிறங்கிமேலேத்திவைத்து
முடிபேயொருபளித்தாதீர்த்து அப்போ
மூணுநாள்வரைக்குமேபிறைந்தானேகுண்டு
திருப்பூவணக்கோட்டைமண்ணிலேதான் ஒரு
தேங்காயளவுமேயிடிந்துவிழவில்லை
சுப்ரமண்யதேவர்திலிருந்து நல்ல
துடியானவெங்கலபிறங்கியையிழுத்து
முக்குறுணிமருந்துகுண்டுபோட்டு அதற்கு
மூதலானகிடாவெட்டிப்பொங்கலுமிட்டு
குபீலென்றுஒருபளித்தாஅடித்தான் அப்போ
கொட்டமிடுகான்சாய்புகூடாரந்தெறித்து
கூடாரக்கயிறுமறுந்து அப்போ
குபீரென்றுஏழுகுதிரைக்காலுந்தெறிந்து
எழெட்டுபேர்கள்தலையுடைய அப்போ
இதமாதிகானசாய்புகண்ணாலேபார்த்து
நம்மைப்போலேயொருமனிதன் இதிலே
இருக்கிறான்திருப்பூவணம்வாங்கமுடியாது
திருப்பூவணம்வாங்கமுடியாது என்று
சிவகங்கைமேல்சாரிநடந்திட்டான்கானன்
ராத்திரிக்குராத்திரியேநடந்து அப்போ
நலமானசிவகங்கைப்பேட்டைதனைவளைத்து

அரண்மனையைஅக்கினியாய்க்கொளுத்தி — மறவர்
ஆறுகால்சவுக்கையைத்தீயாயெரித்து

மேல்விட்டுக்கம்பளியைவிரித்து — கானு
மீசையின்மேற்கைபோட்டுமேற்குமுகந்திரும்பி

பட்டணமெல்லாங்கொள்ளையடித்து — அப்போ
படைமன்னன்கிழக்குமுகந்திரும்பியேகானன்

தஞ்சாவூர்வெள்ளிக்குரிச்சி — மறவர்
சமஸ்தானப்பாத்தியனாரையுங்கொள்ளையடித்து

கானுராணிகணவாயைவெட்டி — அப்போ
கான்சாய்புடைத்திட்டான்திசைமதுரைக்கோட்டை

சந்த்ரகுலமுத்துவடுகையர் — அப்போ
சாமியுங்காளையார்கோயிலிலிருந்து

தாண்டவராயபிள்ளைக்கு — அவரும்
தயவாககாயிதமெழுதலுற்றாரப்போ

அண்ணேவாதாண்டவராயா — மதுரை
ஆளுகிறசான்சாய்புசிவகங்கைவந்து

அரண்மனையையக்கினியாய்க்கொளுத்தி — நமது
ஆறுகால்சவுக்கையைத்தீயாயெரித்து

சீமையெல்லாங்கொள்ளையடித்து — கானு
திசைமதுரைக்கோட்டைபோய்ச்சேர்ந்திட்டானண்ணே

திரும்பிலேயேகோட்டைவிட்டுத்தெற்கே — என்று
சீக்கிரமாய்நிருபத்தையனுப்பிவிட்டாரப்போ

வருகுதேவடுகையர்நிருபம் — நல்ல
வளமிகுத்ததிருக்கோட்டிக்குடியுங்கடந்து

பொன்மலைமைதானவெளிதனிலே — அப்போ
பிள்ளைமார்சமுகத்தில்வந்துதேநிருபம்

சாமியுடநிருபம்வந்துதென்று — நல்ல
தளகர்த்தநிருபத்தைவாசித்துப்பார்த்து

மறுவயணம்விண்ணப்பமோலை — எழுதி
வரவிட்டான்முல்லைமணிதாண்டவராயன்

ஆண்டவனேமுத்துவடுகையா — உனது
அடிமைதான்மறுவயணஞ்சொல்லுகிறேன்கேளு

நபாபைநான்பேட்டிசெய்தாச்சு — சுவாமி
நாலுவகைவெகுமதியும்வாங்கினேனடியேன்

ஐந்தாறுநாளையிலேசுவாமி அடியேன்
அதுவேதொழிலாயிருந்துபாளையத்தைக்கூட்டி
பிரட்டனையுங்கையோடகூட்டி சுவாமி
பொன்மதுரைமேல்வந்திறங்கிறேனடியேன்
எந்தெந்தசிமையழிந்தாலும் நமது
திருப்பூவணக்கோட்டைபத்திரம்சுவாமி
ஆராரிறந்துபோனாலும் சுவாமி
ஆண்டவனீர்மாத்திரம்கோயிலிலிருக்க
கோயில்விட்டுவெளியில்வரவேண்டாம் என்று
குறிப்பாகவோலைதனையெழுதியேயனுப்பி
தாமோதரம்பிள்ளைதனையழைத்து முல்லைத்
தாண்டவராயபிள்ளையேதுசொல்வானும்
வந்துவெகுநாளாச்சுதம்பி நன்மை
மம்முதலிநபாபுசாய்ப்பழைக்கவேயில்லை
கோட்டைக்குள்போகவேணுந்தம்பி என்று
கோபமாய்ச்சேனைகட்குப்பயணமென்றுசொன்னான்
தாமோதரம்பிள்ளையுமப்போது தனது
தளங்களைக்கண்ணாலேவிட்டுப்பார்த்து
அவ்வாறுபிறற்சடைமருந்து துபாக்கிக்கு
அசையாதரட்டைகுண்டுபாச்சுமென்றுசொல்லி
பதினேழாயிரஞ்சனத்தைநிறுத்தி அப்போ
பாகாகசனங்களுக்குறுதிகளைச்சொல்லி
பிள்ளைமார்குதிரையின்மேலேறி நல்ல
பிரியமாய்தெற்குகோட்டைத்தலைவாசல்வந்து
திடீரென்றுகோட்டைவாயிற்குள்ளே அப்போ
சிக்கிரமாயிநுபேருறும்வரும்வேளைதனிலே
அர்ச்சாராமமிறைடிவந்து அப்போ
அரேபிள்ளைமுல்லைமணித்தாண்டவராயா
மம்முதலியுத்தரவுமில்லை நீங்கள்
வரக்கூடாதென்றுசொல்லித்தடுத்திட்டான்ராமன்
அப்போதாண்டவராயபிள்ளை பார்த்து
அன்பாகராமனுக்கேதுசொல்வானும்
நசப்பனதுவளவிற்குப்பிள்ளை வந்தால்
தடைசொல்லித்தள்ளுவதுநீதியோராமா

இப்படிதாண்டவனுஞ்சொல்ல ராமன்
இருமென்றுநபாபுதேவடிக்குவந்து

ஆண்டவனேமம்முதலிசாய்பே உனது
அடிமைநானொருவயனஞ்சொல்லுகிறேன்கேளு

இருபிள்ளைமார்களும்வந்தார் அடியேன்
எதிர்கொண்டுகுதிரைலகான்கையிலேபிடித்து

சாய்புடையவுத்தரவுமில்லை நீங்கள்
சனத்தோடேவரக்கூடாதென்றுநான்சொன்னேன்

அதைமிஞ்சிக்குதிரைமேலேறி அவர்கள்
அக்கிரமாய்வருகிறாரென்றுசொன்னான்ராமன்

அப்போதுமம்முதலிசாய்பு பாதர்
ஆலோசித்தேயவருமேதுசொல்லலுற்றார்

நாலுதலைவாசலையுஞ்சுற்றி அப்போ
நலமானபாராவும்வைக்கவேசொல்லி

பட்டாளஞ்சுற்றிலும்வருக அப்போ
பாட்சாநபாபுதுரைபுறப்பட்டார்வெளியில்

இருபேருங்குதிரைவிட்டிறங்கி அவர்கள்
எழுதரங்குனிந்தப்போசலாம்வாங்கிக்கொண்டு

இருபேருங்கைகட்டிநின்று நல்ல
இஷ்டமாய்துதித்தவர்கள்நிற்கும்வேளையிலே

அரேபுள்ளைமுல்லைமணிமார்பா நானும்
அன்பாகவொருவசனஞ்சொல்லுகிறேன்கேளு

வரச்சொல்லியனுப்புமுன்னே நீங்கள்
வந்தவகையேதென்றுகேட்டார்நபாபு

தசப்பனுடவளவிற்குப்பிள்ளை வந்தால்
தடையென்னவென்றுசொல்லிவந்திட்டேனடியேன்

கோபுரங்கண்டுநான்துரையே அடியேன்
பாவங்கள்நீங்காமல்போவேனோசாய்பு

தகப்பனது அரண்மனையைப்பார்க்க நானும்
தடையொன்றிலாமலேவந்திட்டேனடியேன்

இப்படிதாண்டவனும்சொல்ல அதற்
கேதுசொல்வார்மம்முதலிசாய்புதுரையப்போ

நீயேயிப்படிவந்தாலே இந்த
நிமிஷத்தில்நாலுதெருவீதியும்பார்த்து

சிக்கிரம்வெளியேபோவென்று பாதர்
சிங்கம்நபாபுதுரைசொல்லிவிட்டாரப்போ

இந்தமட்டுஞ்சொன்னதேபோதும் என்று
எழும்பினான்தளத்தோடேபட்டணத்தைப்பார்க்க

வடக்குதெருவீதியிலேவந்து தாயு
மானமாலைதண்டிவடபாரிசந்திரும்பி

சிந்தாமணித்தலைவாசல்வந்து இருவரும்
திடீரென்றுகாவேரிஸ்நானமும்பண்ணி

தளங்களைத்திருப்பியேவந்து அப்போ
தயவாகக்கோட்டைக்குள்ளேதான்வந்துசேர்ந்து

தாயுமானர்கோவிலுக்குவந்து தளவர்
தயிரியமாய்த்தரிசனஞ்செய்யவேணுமென்று

ஐம்பதுபொன் தருக்கள்கையில்கொடுத்து அந்த
நாழிகையிலபிஷேகஞ்செய்யவேணுமென்று

ஐம்பதுபொன்பதக்கமெடுத்து அந்த
நாழிகையில்சுவாமியின்கழுத்திலேதரித்து

மாலைசந்தனங்கையில்வாங்கி அப்போ
மங்கம்மாஅரண்மனையைக்கண்ணாலேபார்த்து

நபாபுதேவடியும்பார்த்து அங்கே
நலங்கொண்டகானவுந்தேவடியுங்கடந்து

இங்காரத்தோப்பையும்பார்த்து பாதர்
திடீரென்றுகடைத்தெருவீதிவருகையிலே

கடலையவல்பொரிவுண்டைகளுமே அங்கே
கடைகளில்தட்டுதட்டாயிருக்கிறதைக்கண்டு

கருங்கச்சைசனங்களைப்பார்த்து அப்போ
கடைக்கண்ணைகாட்டியேகைகாட்டிவிட்டான்

நெல்லரிசிவாருவார்சிலபேர் அங்கே
நேரிட்டகடலைபொரிவாருவார்சிலபேர்

இப்படியேகொள்ளையவரடிக்க அப்போ
எங்கையும்பொல்லாதகூச்சலுண்டாச்சு

பட்டணங்கொல்லென்றுபோச்சு அப்போ
பாட்சாநபாபுதுரையிதுசேதிகேட்டு

நாலுதலைவாசலையுமடைத்து அப்போ
லாயத்துக்குதிரைக்குஜீனிவைக்கச்சொல்லி

புறப்பட்டார்மம்முதலிசாயபு சுற்றி
போர்வீரர்வெள்ளைக்காரர்முன்னேநடக்க

வருகிறார்நபாபுதுரையும் அப்போ
வலதுகையிலேந்துமுடிகயிற்றையெடுத்து

தாமோதரம்பிள்ளையுமப்போது முல்லைத்
தாண்டவராயனையேறிட்டுப்பார்த்து

என்னதான்சொன்னாலுமண்ணே நீயும்
எள்ளளவுமென்பேச்சைக்கேழ்க்கிறதேயில்லை

மம்முதலிவருகிறகோபத்தை இப்போ
மன்னவனேபாருமென்றான்தாமோதரம்பிள்ளை

போபோபேப்கொண்டதம்பி உனது
புத்தியுமிவ்வளவோதாமோதரம்பிள்ளை

நபாபையொருவார்த்தையினால்சட்டி அவர்
கையிலேவெகுமதியும்வாங்காமற்போனால்

என்பேருநகாரர்ளனல்ல நான்
எடுத்ததுவுந்தளகர்த்தமோதிரமுமல்ல

சொல்லியரைநாழிகைக்குள்ளாக நல்ல
துரைமகன்நபாபவந்நம்வந்திட்டாருகில்

இருபேருங்குதிரைவிட்டிறங்கி அப்போ
ஈஸ்பரன்பாபுமுன்கைகட்டிநின்றார்

அரேபிள்ளைமுல்லைமணிமார்பா இப்போ
ஆரடாயிந்ததுடுக்குனக்குத்தந்தார்

ராஜாவுமிங்கேநானிருக்க எனது
ராச்சியத்தைக்கொள்ளையிடலாமோ

ஆண்டவனேமம்முதலிசாயபே உனது
அடிமைநானொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு

கரும்புஎன்சிமையிலேயில்லை சாயபு
கடலைபொரியவலுண்டைகிடையாததேசம்

நெல்லரிசியெங்கள்சிமையிலே இப்போ
எள்ளளவுங்கிடையாதுமம்முதலிதுரையே

அடிமைநான்சாப்பிடுஞ்சோறு இந்த
வரகரிசிச்சோறென்றுசொன்னமாத்திரத்தில்

ரண்டுபடிவாகரிசியவிழ்த்து அப்போ
நேரிட்டமம்முதலிமுன்னாலேவைத்து

அரிசியைப்பார்க்காதமனிதர் இவர்கள்
ஆசையாலோடியெடுத்திட்டார்துரையே
இதற்குநீகோபித்திரானல் அடிமைக்
கெங்கேகுடியிருப்புமம்முதலிதுரையே
அப்போதுமம்முதலிபார்த்து ஒரு
ஆலோசனைசெய்துசொல்லலுற்றார்துரையும்
சென்னல்பெருத்ததுன்தேசம் என்று
முன்னமேபுலிதேவன்சொன்னனேயெனக்கு
இப்படிசொல்லுகிருய்நீயும் இதிலே
ஆர்பேச்சைநிசமென்றுநம்புவேனும்
நல்லரிசிகிடையாதசேதி நீயும்
வந்ததேயென்னிடத்தில்சொன்னையேயானல்
உன்சனத்துக்கெல்லாம்படிகொடுப்பேன் முன்னே
உத்தமனேசொல்லாமற்போனயேஎன்னிடத்தில்
ரண்டுபணமதையெடுத்து அப்போ
நேசமுடன்தளமந்த்ரிகையில்கொடுத்து
உன்செனத்துக்கெல்லாம்நெல்லரிசி யளந்து
உத்தமனேபடிகொடுமென்றுத்தரவுசொன்னர்
அப்போதாண்டவராயன்சொல்வான் சுவாமி
ஆண்டவனேநபாபேநான்சொல்லுகிறேன்கேளும்
வந்துவெகுநாளாச்சுதுரையே எனக்கு
மன்னவனேமறுவசனஞ்சொல்லுமென்றுகேட்க
அப்போதுமம்முதலிதுரையும் பாதர்
அசையாதபிரட்டன்முகமேறிட்டுப்பார்த்து
வழிபாதைதெரியாமலிருந்தோம் நமக்கு
வழிகாட்டவந்தார்களிருபிள்ளைமாரும்
பன்னிரண்டுபட்டாளத்தைக்கூட்டி பிரட்டா
பாளையங்கூட்டிநடதிசைமதுரைநோக்கி
நல்லதென்றுவெள்ளைக்காரதுரைகள் அப்போ
நலமானதம்பூரடித்தும்புறப்பட்டு
காக்காத்தோப்புவெளிதனிலே வந்து
காசாகம்பினிசனத்தைக்கூடாமிறக்கி
கொடிதன்னையுங்கொண்டுவந்துபோட்டு பிரட்டன்
கூடாரமடித்திட்டான்சொல்லப்போகாது

கர்னல்பிறங்கியனிரண்டு தனது
 கறுப்புச்சட்டைக்காரருபட்டாளமெட்டு
மூவாயிரந்துருப்புக்குதிரை சேர்த்து
 முன்னூறுவண்டியில்மருந்துகுண்டுமேற்றி
ரேக்கலாமுப்பதையுங்கூட்டி அப்போ
 நேரிட்டசாராயப்பீப்பாய்களுமேற்றி
மதுரைக்குப்பயணமென்றுப்பிரட்டன் நல்ல
 உறுதியாய்க்கூடாரமிறக்கினமாத்திரத்தில்
தாமோதரம்பிள்ளையுமப்போது முல்லைத்
 தாண்டவராயன்முகமேறிட்டுப்பார்த்து
தொண்டிவழிகடந்தோமேயானால் போகு
 வெகுதூரம்வெகுநாள்செல்லுமேயண்ணே
துவரங்குறிச்சிவழிசென்றால் மலைப்
 பாதையதுகல்லுமேல்வண்டியேறாது
எந்தவழிபோகலாமண்ணே என்று
 இதமாகதாமோதரான்கேழ்க்கும்வேளையிலே
தாண்டவராயதளமந்திரி நல்ல
 சாதுரியமாய்வார்த்தைசொல்லுகிறானப்போ
அப்படியேன்போகவேணுந்தம்பி நமது
 நடுச்சீமைவழியாகப்போவோமென்றுசொன்னான்
நடுச்சீமைவழியாகப்போனால் நமது
 தேசத்தைக்கண்ணாலேபார்ப்பானேபிரட்டன்
திரும்பிவரும்போதுபெரியபிரட்டன் நமது
 தேசத்தில்தோரணங்கட்டுவானேயென்றான்
அப்படியேவழிகூட்டிப்போவேன் அந்த
 அமைப்புனக்குத்தெரியுமோதாமோதரம்பிள்ளை
ஒருவரையாகிலுங்காண்பிப்பேனோ அவனுக்
 குராந்தவழிதெரியவோகூட்டுவேன்பாதர்
பகலெல்லாஞ்செடிக்குள்ளேயடைப்பேன் ராவில்
 பாளையத்தைக்கூட்டுவேனென்றுசொன்னானப்போ
சொல்லியரைநாழிகைக்குள்ளே பிரட்டன்
 துடியாகபாளையத்தையெழுப்பினான்பாதர்
ஆச்சாரிக்கிரண்டன்தளமும் அப்போ
 அன்பானபாளையத்தையெழுப்பினான்பிரட்டன்
பொய்மலைமைதானவெளிதாண்டி தெற்கே
 புறப்பட்டுஅலுசமைதானவெளிதாண்டி

குடுமிமாமலைக்கிழக்காக அப்போ
குபீரென்றுநெரிஞ்சிக்குடிப்பாதையுங்கழித்து

கிழக்குமுகம்பாளையத்தைநடத்தி அப்போ
கீர்த்திபெறுதிருமையத்துக்கோட்டைக்குத்தெற்கே

குருவிக்கொண்டான்பட்டிவந்துசேர்ந்து பிரட்டன்
கூடாரமடித்தங்கேபாளையத்தைநிறுத்தி

இறங்கியறைநாழிகையிற்குள்ளே தளவர்
இருபேருப்பிரட்டனிடகூடாரம்வந்து

இங்கமேதுரைபெரியபிரட்டா ஒரு
சேதிநான்காராளன்சொல்லுகிறேன்கேளு

மதுரையின்னம்பத்துநாழிவழிதான் நாம்
வருஞ்சேதிகேட்டுவந்திடுவானேகானன்

பகலில்வழிநடக்கவேகூடாது நாமும்
ராத்திரிக்குராத்திரியேநடக்கவேணுமென்றான்

நல்லதென்றுதுரைபெரியபிரட்டன் சனத்தை
ராத்திரிக்குராத்திரியேபயணமென்றுசொன்னான்

பகலெல்லாங்கூடாரத்திலிருந்து சாயுங்
காலம்பயணமென்றுசாப்பிட்டுப்போட்டு

தம்பூருவாத்தியமுழங்க சாயுங்
தாம்பாளையம்பயணமென்றுசொன்னான்

குருவிகொண்டான்பட்டியுங்கழித்து தளவர்
கோட்டைமடூரக்காட்டுப்பாதைவழிகூட்டி

ராத்திரிக்குராத்திரியேநடந்து அந்த
ராத்திரியில்பல்லென்றுகிழக்குவெளுக்கையிலே

பாகணிக்காட்டில்கொண்டுவந்து குதிரைப்
பாளையத்துடன்தளத்தையிறக்கினான்காட்டில்

பகலெல்லாமங்கையேகழித்து தளவர்
ராத்திரிக்குராத்திரியெழுப்பினார்தளத்தை

பாகணிகாடுங்கடந்து நல்ல
பனங்குடிக்காட்டையுஞ்சீக்கிரமாய்த்தாண்டி

மங்கலந்தாலுக்காதாண்டி நல்ல
மகாராசன்பாளையத்தைராத்திரியேகூட்டி

இராமேஸ்வரப்பாதையாக தளத்தை
இரவெல்லாந்தானடத்திநெம்பல்மைதானத்தில்

அப்போதுதுரைபெரியபிரட்டன் தனது
அசையாதபாளையத்தைக்கொண்டுவந்திறங்கி

தளகர்த்தர்தன்னைவரவழைத்து திருப்பூ
வனமெவ்வளவுதூரமென்றுகேட்டான்பிரட்டன்
ஆண்டவனேதுரைபெரியபிரட்டா நாம
ஐந்துமணிவேளைக்குப்போகலாமென்று
பிரட்டன்பனிரண்டுபட்டாளத்தை பாம்பைப்
பட்டியிலேகொண்டுவந்துநலமாகயிறக்கி
பகலெல்லாமங்கிருந்துபோட்டு அப்போ
படைமன்னன்பாளையத்தைராத்திரியிலெழுப்பி
திருப்பூவனக்கோட்டைவந்துசேர்ந்து அங்கே
சிராகபிரட்டனிடபட்டாளத்தையிறக்கி
முள்ளியனெம்மலெனுமூரில் இரு
பிள்ளைமார்கள்பாளையத்தைக்கொண்டுவந்துசேர்த்தார்
மதுரைவளர்கான்சாய்ப்புநீலன் படர்
வயணமாயிதுசேதிகாதாலேகேட்டு
தகப்பனுகியபெரியபிரட்டன் குதிரை
தளத்தோடுதிருப்பூவனமிறங்கினுனென்றறிந்து
மோதிகான்சாய்பையுமழைத்து சீனி
வெள்ளைக்காரன்செய்குந்தன்அனுமந்தனையழைத்து
தாதப்பனரசப்பனையழைத்து காலு
சாயபுதுரைகுதிரைக்கெல்லாஞ்சீனிவைச்சச்சொல்ல
முன்னூறுதுரப்புகுதிரையுடனே அப்போ
முடிமன்னன்கான்சாய்புபுறப்பட்டான்வெளியில்
சிலையுமான்புளியங்குளந்தாண்டி நல
திருவாத்தூர்மைதானவீதியுங்கடந்து
திருவனங்காட்டுக்குள்ளேவந்து தலை
சேனைகளைக்காட்டுக்குள்ளொளித்துறைத்துவிட்டு
தலையெட்டிப்பார்த்தீரேயானுல் உங்களை
தப்பாமல்பட்டாவால்வீசிடுவேன்காணு
அவனுக்கவன்பதனமென்றுசொல்லி காணு
ஆணிச்சிக்கணவாயிலொளித்துவைத்திருந்தான்
பல்லென்றுகிழக்குவெளுக்கையிலே பிரட்டன்
பட்டாளத்தைநிறுத்திதம்பூரடித்து
சனத்தையெல்லாம்மலைபோலேநிறுத்தி அப்போ
தம்பூருமுழங்கியேகோட்டைக்குள் நுழைந்தான்
கோட்டைக்குள்பிரட்டன்போகுமுன்னே கானை
குதிரைவிட்டுபாளையத்தில்கலக்கவேணுமென்று

நடத்தினாருக்குசிறாய்க்குதிரை அந்த
நாழிகையில்திருப்பூவனக்குளக்கரையுந்தாண்டி
வயல்வழியாய்க்குதிரைதனைவிட்டு காலு
வருகிறான்திருப்பூவனஆற்றுவழிநோக்கி
முதல்பாராக்காரனையும்வெட்டி ஒரு
மூச்சுக்குள்பட்டாளத்துள்ளேவிழுந்து
கத்திமுனைரத்தங்களொழுக அப்போ
கான்சாய்புவருகிறதைக்கண்டானேபிரட்டன்
வந்திட்டான்கான்சாய்புவென்று பிரட்டன்
வரிசையாய்பட்டாளத்தைபெற்றுமுகந்திருப்பி
டொப்பிகழட்டியேசிமேயடித்து பிரட்டன்
சுருக்காகமுன்கைதனைகடித்தமாத்திரத்தில்
மூன்றணியாகப்பிரித்து பட்டாளத்தை
முன்னேற்றிப்பிரம்பாலேமூட்டினான்பிரட்டன்
மண்வாரியிறைத்திட்டாப்போலே குண்டு
வருகிறதைத்திசைமதுரைக்கான்சாய்புபார்த்து
ஒளித்துவைத்தனப்பட்டாளத்தை அப்போ
உத்தமன்கான்சாய்புசைகைசெய்தழைத்து
திருப்பியேதனதுபட்டாளத்தை பிரட்டன்
சேனைமேல்பாய்ந்திட்டான்திசைமதுரைகானன்
இரண்டுகையில்ரண்டுமுசப்பட்டா பிடித்து
நேரானபிரட்டனிடபாளையத்தில்விழுந்து
வீசினான்துரைமதுரைகானன் அப்போ
விழுகிறசிப்பாய்தலைகள்சொல்லப்போகாது
கையற்றுவிழுகிறதுசிலது அங்கே
காலற்றுவிழுந்தபேர்சொல்லப்போகாது
தலையற்றுவிழுகிறதுசிலது அப்போ
தாறுமாறாய்மூன்றுதுண்டாய்விழுகிறதுசிலது
வெள்ளரிக்காய்வீசினாற்போல பாதர்
வீசினான்சிப்பாய்களைபொல்லாதகானன்
துப்பாக்கிதிருப்புவதற்குள்ளே பாய்ந்து
துடியாகவெட்டினான்திசைமதுரைகானன்
சோஜர்தலைகளொருசோடி அங்கே
துள்ளிவிழுகிறதைச்சொல்லமுடியாது
தீன்தீனென்றுசொல்லி பாதா
திரும்பியேநாலுமூலைவீசினான்பட்டாவை
பாணிபாணியென்றுசொல்லி அப்போ
பதைத்துவிழுகிறதேசிப்பாய்மார்தலைகள்

தண்ணீர்தண்ணியென்றுசொல்லி அங்கே
தவித்துவிழுவோரைச்சொல்லமுடியாது

ஓடுதேமுழங்காலுரத்தம் அதிலே
உருளுதேசிப்பாய்தலைகள்பனங்காயைப்போலே

பலமேறுதுருப்புகுதிரை அப்போ
மாளுதேபொல்லாதவைதானவெளியில்

குதிக்குதேசோஜர்தலைகள் அங்கே
கூவுதேகாய்நரிகள்பிணங்களைத்தின்ன

சோஜர்போனவழிகாணேம் நல்ல
சிப்பாய்கள்போனவழிதெரியவேயில்லை

கத்திகட்டிபோனவழிகாணேம் அப்போ
காதர்போனவழிதெரியவேயில்லை

அவல்தார்போனவழிகாணேம் நல்ல
ஜூஜிட்டன்போனவழிதெரியவேயில்லை

சுபேதார்போனவழிகாணேம் அப்போ
சோஜர்கள்பட்டாளம்வழிகாணேம்

அப்படிகான்சாய்புநீலன் பாதர்
அறுத்ததலைகளென்றால்சொல்லமுடியாது

கத்தியெல்லாம்ரத்தமாய்ப்போச்சு சாறு
கனத்ததலைகுட்டையெல்லாம்ரத்தமாய்ப்போச்சு

ரத்தகவுல்சுற்றியேவீச அப்போ
